Price Rs. 20.00
PUBLIC LIBRARY
JAFFNA.

ISSN 1391-9504

# Vijey விஜய்

04.06.2008 - மலர் 05, இதழ் 13



## ஜூன் மாதத்தின் சிறப்பு

# உலக சுற்றாடல் தினம்

## வளிமண்டலத்தை நேசிப்போம்

விலை ரூபா 12/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூமியதிர்ச்சியில் இரண்டு நண்பர்களின் உயிர்காத்த 10 வயதுச் சிறுவன்

சீனாவில் ஏற்பட்ட கொடூர பூமியதிர்ச்சியின்போது உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த தனது நண்பர்களில் இருவரைக் காப்பாற்றி ஹீரோவாகியுள்ளான் 10 வயதுச் சிறுவன் ஒருவன்.

பூமியதிர்ச்சியால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஒன்றான இன்ங்ஷியூ என்னுமிடத்தில் உள்ள பாடசாலையொன்றில் கல்வி கற்றுக் கொண்டிருந்தான் லின்ஹாவோ என்னும் இந்தப் பத்து வயதுச் சிறுவன்.

பாடசாலையின் நடைபாதையூடாக இந்தச் சிறுவன் நடந்து சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட பூமி அதிர்வினால் கட்டடம் இடிந்து விழுந்தது. இந்தச் சிறுவனும் இவனின் நண்பர்களில் இருவரும் கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கிக் கொண்டனர். இந்த இடிபாடுகளுக்குள் சிக்கி லின்னும் காயமடைந்தபோதிலும் அவன் தனது நண்பர்களையும் அதிலிருந்து விடுவித்ததுடன் தானும் தன்னை விடுவித்துக் கொண்டான்.

அச்சிறுவன் தமக்கு நடந்தவற்றைக் கூறிய போது,

''நான் நடந்து சென்று கொண்டிருந்தபோது ஏற்பட்ட பூமி அதிர்வினால் கட்டடம் இடிந்து விழுந்தது. எனக்கு அருகில் எனது நண்பர்களில் இருவர் இடிபாடுகளில் சிக்கிக் கொண்டனர். நான் வெளியில் ஏறிவர என்னால் இயன்ற வரை முயற்சித்தேன். நான் வெளியில் வந்ததும் என் நண்பர்களில் ஒருவரை வெளியில் இழுத்து எடுத்தேன்'' சிதைந்த கட்டடத்துக்குள் இரண்டாவது தடவையும் சென்று லின் மற்ற நண்பனையும் வெளியில் இழுத்து எடுத்துக் காப்பாற்றினான்.



ஆனால், இதில் துயரத்துக்குரிய விடயம் என்னவெனில் அவனுடைய வகுப்பில் இருந்த 31 பிள்ளைகளில் 10 பேர் மட்டுமே உயிர் பிழைத்துள்ளனர்.

இந்தப் பூமியதிர்ச்சியில் மொத்தமாக 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் பலியாகியுள்ளனர். லட்சக் கணக்கானோர் வீடுகளை இழந்துள்ளனர்.

பூமியதிர்ச்சியில் பலியானவர்களின் ஆத்மசாந்தி வேண்டி சீனாவில் மூன்று நாட்கள் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.






500 வருடங்களுக்கு முன்னர் இன்கா (INCA) என்றழைக்கப்படும் ஒரு சமூகத்தினர் தென் அமெரிக்காவின் மேற்குப் பகுதியில் வாழ்ந்தனர். அவர்கள் வாழ்ந்த பிரதேசம் சக்கரவத்தியினால் (Emperor) ஆளப்பட்டமையால் 'சாம்ராச்சியம்' என்றழைக்கப்பட்டது. 'இன்கா' மக்கள் சக்கரவர்த்தியை கடவுளாகக் கருதி மதித்தனர். சுமார் 6 மில்லியனுக்கும் (60 இலட்சம்) மேற்பட்ட மக்கள் அக்காலப் பகுதியில் இந்த சாம்ராச்சியத்தில் வாழ்ந்தனர்.

பெரு (Peru), சிலி (Chile), ஈக்வடோர் (Ecvador), பொலிவியா (Bolivia) மற்றும் ஆர்ஜன்டினா (Argentina) ஆகிய நாடுகளின் பகுதிகளை உள்ளடக்கிய ஒரு பெரும் பிரதேசமாக இந்த 'இன்கா' இராச்சியம் காணப்பட்டது.

இன்கா இராச்சியத்தின் பெரும் பகுதி 'அந்தீஸ்' மலைப் பகுதியை உள்ளடக்கியதாகவே காணப்பட்டது. இன்கா சாம்ராச்சியத்தின் அனைத்து நகரங்களும் ஒழுங்காகவும் அழகாகவும் அமைக்கப்பட்டிருந்தன. பெரு நாட்டில் இன்றும் காணப்படும் குஸ்கோ (Cusco) எனும் நகரே இந்த சாம்ராச்சியத்தின் தலைநகராக இருந்தது.

இன்கா மக்களின் பிரதான தொழில் விவசாயமாகும். கிழங்கு வகைகள், சோளம், பூசணி பேன்ற பல்வேறு பயிர்களைப் பயிர் செய்து விளைச்சலைப் பெற்றனர். வாத்து, லாமா (Lama), அல்பகஸ் (Alpacas) சீமை பன்றி (Guinea pig) போன்ற விலங்கு வளர்ப்பிலும் இவர்கள் ஈடுபட்டனர்.

1532 ஆம் ஆண்டு அந்த இனிமையான இன்கா நாகரிகத்திற்கு பேராபத்து வந்தது. பிரான்சிஸ்கோ பிசாரோ என்பவரின் தலைமையிலான ஸ்பானியப் போர்ப்படைகள் இன்கா இராச்சியத்தை ஆக்கிரமித்தன. இப்படைகள் அதன் அப்போதைய சக்கரவர்த்தியான அதஹுவல்பா (Atahualpa) என்பவரை சிறைப்பிடித்துக் கொன்றன. அச்சம்பவத்துடன் இன்கா சாம்ராச்சியம் அழிந்தது. இன்கா நாகரிகமும் மறைந்தது.

**ஜே.விபாகர்**

## நீரில் மூழ்கிய பழம்பெரும் கிராமம்

ஸ்பெயினில் நீரில் மூழ்கியிருந்த பழைய கிராமம் ஒன்று பல வருடங்களுக்குப் பின்னர் தற்பொழுது முதல் தடவையாக நீர் மட்டத்தில் இருந்து வெளியில் தெரிகிறது. நீர்மட்டம் குறைந்துள்ள காரணத்தாலேயே இக்கிராமம் தற்பொழுது வெளியில் தெரிகிறது.



புராதன காலத்துக் கட்டிடங்கள் மற்றும் கோபுரத்துடனான ஒரு கிறிஸ்தவ ஆலயம் என்பன 1960 ஆம் ஆண்டு நீர்த்தேக்கம் ஒன்று அமைப்பதற்காக நீரினால் மூழ்கடிக்கப்பட்டது. பார்ஸிலோனா நகரத்துக்கு அருகிலேயே இந்த நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டது. ஆனால், இந்த நகரம் கடந்த 60 ஆண்டு காலமாக கடும் வறட்சிக்கு முகம் கொடுத்து வருவதோடு நீர்ப்பாற்றாக்குறை காரணமாக மிகுந்த சிரமத்தையும் எதிர்நோக்கி வருகிறது. ஸ்பெயினின் மற்றப் பகுதிகளிலிருந்து கப்பல் மூலம் இந்நகருக்கு நீர் விநியோகம் மேற்கொள்ளப்படுகிறது. மழைக் காலத்தில் இந்த நீர்த்தேக்கம் நிறைந்து விடுவதால் இந்தக் காலப்பகுதியில் நீர் நிறைந்து காணப்படும். எனினும், கடந்த சில வருட காலமாக இங்கு கடும் வறட்சி நிலவுவதே மேற்படி நிலைக்குக் காரணமாகும்.

இங்கு நீர் விநியோகத்துக்காக பாரிய அளவிலான நீர்தாங்கிகள் மூலம் நீர் கொண்டு வரப்படுகின்ற போதும் தற்போதுள்ள இந்தக் கடும் வறட்சியானது இப்பகுதியில் வாழும் மக்களை முதற் தடவையாக பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. இப்பகுதிக்கு அதிகளவு நீரைக் கொண்டு வருவதற்காக இவ்வருட இறுதியில் பாரிய நீர்க்குழாய்கள் பொருத்தப்படவுள்ளன. இந்த நிலையில் காலநிலை வல்லுனர்கள் வறட்சி நீடிக்கும் அபாயம் உள்ளதாகவே எச்சரித்துள்ளனர்.

## சூரிய கடிகாரம்

க்ளொக் (கடிகாரம்) என்னும் சொல் 14 ஆம் (சுமார் 700 வருடங்களுக்கு முன்னர்) நூற்றாண்டிலேயே முதன்முதலாக பயன்படுத்தப்பட்டது. பெல் (மணி) என்னும் லத்தீன் மொழிச் சொல்லான 'க்கொளக்கா' (Clocca) என்னும் சொல்லில் இருந்தே இது உருவானது.

ஆரம்பத்தில் மனிதர்கள் சூரியன் வானில் தவழ்வதை வைத்தே நேரத்தைக் கணிப்பீடு செய்தனர். சூரியன் நேராக வானில் தலைக்கு மேல் இருக்கும் நேரத்தை நாளின் நடுப்பகுதி அல்லது நண்பகல் என்று கணக்கிட்டனர்.

சூரியன் அடிவானத்துக்கு அருகில் இருக்கும் வேளையை அதிகாலை மற்றும் மாலை (அஸ்தமனம்) என்று கணக்கிட்டனர். எனினும், சரியான நேரத்தை அவர்கள் கூறவில்லை.


மிகப்பழைமையான கடிகாரம் நிழற்கடிகாரம் அல்லது சண்டியல் 'குளொக்' (Sundial Clock) என்றே அழைக்கப்பட்டது. இந்தக் கடிகாரம் சுமார் 5,500 வருடங்களுக்கு முன்னர் உபயோகிக்கப்பட்டது சூரியனை வைத்தே இந்தக் கடிகாரத்தில் நேரம் கணிக்கப்பட்டது. வட்டமான தட்டில் சூரிய ஒளி பட்டு அதன் நிழல் காட்டும் இடத்தின் மூலம் நேரம் உணரப்பட்டது. இந்தக் கடிகாரத்தை உபயோகித்து பகல் பொழுதில் மாத்திரமே நேரத்தைக் கூறக்கூடியதாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் தரத்திற்கு பிள்ளைகளை அனுமதித்தல்:

# விண்ணப்பங்கள் ஜூன் 1 முதல் 30 வரை ஏற்றுக்கொள்ளப்படும்



அடுத்த ஆண்டில் அரசாங்க பாடசாலைகளில் முதலாம் தரத்தில் பிள்ளைகளை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்களை இம்மாதம் 1 ஆம் திகதியிலிருந்து 30 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

பிள்ளைகளை முதலாம் தரத்தில் சேர்த்துக் கொள்வதற்கான புதிய சுற்றுநிருபமும் மாதிரி விண்ணப்பப்படிவமும் கடந்த மாத இறுதியில் வெளியான தேசிய நாளிதழ்களில் பிரசுரமாகியுள்ளன.

புதிய சுற்றுநிருபத்திற்கமைய, இம்முறை முதலாம் தரத்தில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ள பிள்ளைகளுக்கான அறிவுத் திறன் பரீட்சிப்பு நடத்தப்படமாட்டாது என்றும் மாறாக பிள்ளையின் வதிவிடம், சகோதரர் கல்வி கற்றல், பழைய மாணவர், அரச சேவை இடமாற்றம், கல்வி மற்றும் கல்விச் சேவை, வெளிநாட்டிலிருந்து இடம்பெயர்ந்திருத்தல் போன்ற காரணிகள் கருத்தில் கொள்ளப்படும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

## க.பொ.த சா/தர பரீட்சையில்

# ஒரு பாடத்திலேனும் சித்தியடையாத மாணவர்களுள்ள 340 பாடசாலைகள் இனங்காணப்பட்டுள்ளன

கடந்த ஆண்டு நாடளாவிய ரீதியில் நடைபெற்ற க.பொ.த சா/தர பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் பெறுபேறுகளின் அடிப்படையில், ஒருவரேனும் ஒரு பாடத்திலேனும் சித்தியடையாத மாணவர்களுள்ள 340 பாடசாலைகள் இனங்காணப்பட்டுள்ளதாக பரீட்சைத் திணைக்களத்தின் தகவல் குறிப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.



இதன்படி, தெஹியோவிட்டை, கொழும்பு, கம்பஹா கல்வி வலயங்களில் ஒருவர் கூட ஒரு பாடத்திலாவது சித்தியடையாத பாடசாலைகள் உள்ளமை இனங்காணப்பட்டுள்ளன.

அவ்வாறே, தெல்தெனிய, மொரவக்க, பாண்டிருப்பு, எம்பிலிப்பிட்டிய, மன்னார், முல்லைத்தீவு, சிலாபம், வெள்ளவாய, மஹஓயா ஆகிய கல்வி வலயங்களில் உள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் உள்ள மாணவர்கள் குறைந்தது ஒரு பாடத்திலாவது சித்தியடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவில் ஹோமியோபதி பட்டப்படிப்பிற்கான புலமைப்பரிசில்கள்

இந்திய அரசு தமது நாட்டில் ஹோமியோபதி பட்டப்படிப்பைத் தொடர்வதற்காக இலங்கை மாணவர்களுக்கு 15 புலமைப்பரிசில்களை வழங்க முன்வந்துள்ளது.

க.பொ.த உ/தர பரீட்சையில் விஞ்ஞானப் பிரிவில் சித்தி பெற்ற 28 வயதிற்கு உட்பட்டவர்கள் இப்புலமைப் பரிசில்களைபெற விண்ணப்பிக்கலாம். அத்துடன், குறித்த புலமைப்பரிசில்களை பெற்றுக்கொள்ளத் தெரிவு செய்யப்படுவோர் இந்தியாவிலுள்ள பல்கலைக்கழகங்களில் குறித்த பட்டப்படிப்பை மேற்கொள்ள அனுமதிக்கப்படவுள்ளனர்.

மேலதிக விபரங்களை அறிய விரும்பின், **0115365533/ 0115365544/0112850093/ 0112850247** ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம். இதற்கான முடிவு திகதி ஜூன் 30 ஆகும்.

Vijey விஜய
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
பெக்ஸ்: 2479688

# இரு தலைகளுடனான ஆமை



ஜெனீவா நகரின் இயற்கை விஞ்ஞான நூதனசாலையினால் வெளியிடப்பட்ட இரு தலைகளுடனான அரிய ஆமையொன்றின் படத்தையே நீங்கள் காண்கிறீர்கள்.

மரபணு மாற்றத்தினாலேயே இந்த ஆமைக்கு இரண்டு தலைகள் உருவாகியுள்ளதாகவும். இவ்விரு தலைகளும் சிறப்பாக செயல்படுவதாகவும் அங்குள்ள அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.



## ஆரம்பப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்ய கல்வி அமைச்சு நடவடிக்கை

நாடெங்கிலுமுள்ள ஆரம்பப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்ய கல்வி அமைச்சு துரித நடவடிக்கைகளை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மாகாண சபைகளினால் நிர்வகிக்கப்பட்டு வரும் ஆரம்பப் பாடசாலைகளில் கல்வி அபிவிருத்தியை மேற்கொள்ளும் பொருட்டே கல்வி அமைச்சு இந் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. அத்துடன் கடந்தாண்டில் மாத்திரம் 36 ஆரம்பப் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

60 நாட்களில் தபால் மூல ஆங்கில பாடநெறி
இலகுவாக ஆங்கிலம் கற்றுக் கொள்ள விரும்பும் அனைவருக்கும் சிறந்த வழிகாட்டி
English Language யின் தபால் மூல ஆங்கில பாடநெறிகள்.
BASIC/SPOKEN ENGLISH & DIPLOMA IN ENGLISH
அடிப்படையில் இருந்த தமிழ் விளக்கத்துடன் கற்றுக் கொடுக்கப்படும் தமிழ் எழுத வாசிக்க தெரிந்து இருந்தால் போதுமானது.
60 நாட்களின் அங்கீகரிக்கப்பட்ட Diploma சான்றிதழ் ஒன்றும்
FREE FREE இலவசம் இலவசம் பாடநெறியில் இணையும் அனைவருக்கும்
* இலவச 30 days Easy Way English Book Part1
Easy Way English
இலங்கையின் எப்பாகத்தில் இருந்தும் எம்முடன் இணைய முடியும்
பாடநெறியில் இணைய வயது கட்டுப்பாடோ, ஆங்கில முன் அறிவோ தேவையில்லை. பாடசாலை மாணவர்கள், தொழில் புரிவோர், தொழில் வாய்ப்பு எதிர்பார்க்கும், இல்லத்தரிசிகள் என யாவருக்கும் இணைய முடியும்.
மேலதிக விபரங்களுக்கு 10/- பெறுமதியான 3 முத்திரைகள் அனுப்பி பெறலாம்.
THE ENGLISH LANGUAGE INSTITUTE
P.O. BOX 83, KANDY. Tel: 081-5615561, 0777-220002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூமி பாலைவனமாவதைத் தடுப்போம்

## ஜூன் 5 – உலக சுற்றாடல் தினம்

**சூழல் மனிதனுக்குச் சொந்தமானதல்ல; மாறாக மனிதன்தான் சூழலுக்கு உரித்துடையவனாகின்றான். அத்துடன் இப்பூமியானது மனிதர்களுக்கு மாத்திரம் சொந்தமானதன்று. அது தாவரங்கள் மற்றும் ஏனைய உயிரினங்களுக்கும் சொந்தமானது.**

பூமியில் வாழும் அனைத்து உயிர்களினதும் சீரான வாழ்வுக்கு சுற்றாடல் ஈடுகொடுப்பதாக அமையவேண்டும். அதற்காக சூழலை பாதுகாக்க வேண்டியது எமது கடமையாக இருக்கின்றது.

### உலக சுற்றாடல் தினத்தின் தோற்றம்

1972 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5 ஆம் திகதி ஸ்டொக்ஹோம் நகரில் ஒன்றுகூடிய ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகள், உலக சுற்றாடல் தின நிகழ்ச்சிகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தனர். அத்துடன் முதலாவது சர்வதேச மனித சுற்றாடல் மாநாடும் அங்கு நடத்தப்பட்டது. அன்றிலிருந்து வருடா வருடம் ஜூன் 5 ஆம் திகதி உலக சுற்றாடல் தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. இதே ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை உலக சுற்றாடல் ஸ்தாபனத்தை நிறுவியது. கென்யாவின் தலைநகர் நைரோபியில் இதன் தலைமைக் காரியாலயம் அமைக்கப்பட்டது.

பூவுலகிலுள்ள சகல ஜீவராசிகளையும் இயற்கைத் தாவரங்களையும் பாதுகாப்பதற்காக வேண்டி இந்த ஸ்தாபனம் செயற்பட்டு வருகின்றது. சுற்றாடலை பாதுகாப்பதும் அதன் பயன்களை மக்களுக்கு எடுத்துக்காட்டுவதும் உலக சுற்றாடல் ஸ்தாபனத்தின் செயற்பாடாகும்.

சர்வதேச சுற்றாடல் நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 20 வருடங்களுக்குப் பின்னர் 1992 ஆம் ஆண்டு பிரேசிலின் ரியோ டி ஜெனைரோ நகரில் உலக சுற்றாடல் மாநாடு நடைபெற்றது. இலங்கை உட்பட உலகின் பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகள் இதில் கலந்துகொண்டனர். இந்த மாநாட்டில் 'நிரந்தர அபிவிருத்தி' எனும் தொனிப்பொருளில் சுற்றாடல் பிரச்சினைகள் பற்றி ஆராயப்பட்டன. அத்துடன் அபிவிருத்தி மற்றும் சூழல் பாதுகாப்பின் சவால்கள் குறித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### சுற்றாடல் தின தொனிப்பொருள்

ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றாடல் நிகழ்ச்சித் திட்டம் ஒவ்வொரு வருடமும் சுற்றாடல் தினத்தில் தொனிப்பொருளொன்றை பிரகடனப்படுத்துவது வழக்கம்.

1994 ஆம் ஆண்டு முதலாவது உலக சுற்றாடல் தினத்தில் 'ஓர் உலகம்' (Only one Earth) எனும் தொனிப்பொருள் பிரகடனப்படுத்தப்பட்டது. இந்த அடிப்படையில் 'இயல்பான வாழ்க்கை முறையும் நிரந்தர எதிர்காலமும்' என்பது இம்முறை சுற்றாடல் தினத்தின் தொனிப்பொருளாகும்.

### உங்கள் பங்களிப்பு

உலக சுற்றாடல் தினத்தில் உலக மக்கள் அனைவரினதும் பங்களிப்பு மிக அவசியமாகும். இதற்காக நீங்களும் உங்களது கிராமத்தில், பாடசாலையில் அல்லது நகரில் சூழல் பாதுகாப்பு நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்யலாம். சுற்றாடல் பற்றிய ஓவியங்கள், பதாகைகள், சுவரொட்டிகள் என்பனவற்றை தயாரித்தல், போட்டிகளை ஏற்பாடு செய்தல், ஊர்வலம், பாதயாத்திரை என்பனவற்றை ஒழுங்கு செய்தல், கழிவுப் பொருள் மீள் சுழற்சி மற்றும் முகாமைத்துவ நிகழ்ச்சிகளை மேற்கொண்டு பொதுமக்களுக்கு சுற்றாடல் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை உணர்த்தலாம்.

இதற்காக மரம் நடுதல், நீர் வீண்விரயம் செய்யப்படுவதை தடுத்தல், நீர் மாசடைவைத் தடுத்தல், அநாவசிய மின் பாவனையைக் கட்டுப்படுத்தல், உணவுப் பொருட்கள் பழுதடைவதைத் தடுத்தல், வீட்டுப்புறச் சூழலை சுத்தமாகப் பேணுதல், பிளாஸ்டிக், பொலித்தீன் பாவனையைத் தவிர்த்தல், பிளாஸ்டிக், கண்ணாடித்துண்டுகள் ஆகியவற்றை மீள் சுழற்சி செய்தல், விலங்குகளைப் பராமரித்தல் போன்ற செயற்பாடுகளை வீட்டிலிருந்தும் ஆரம்பிக்கலாம்.

எமது சூழலை பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை ஒவ்வொருவரும் உணர்ந்து செயற்பட வேண்டும். இயற்கைச் சீர்குலைவுக்கு காரணமான காடழிப்புகளைத் தவிர்த்து மரநடுகைகளை மேற்கொண்டு சுற்றாடல் மாசடையச் செய்யும் வழிகளையும் தவிர்த்து இயற்கை சமநிலையைப் பேணுவதனூடாக சுற்றாடலைப் பாதுகாக்க வேண்டும். அனைத்து ஜீவராசிகளும் பிரச்சினைகளின்றி வாழக்கூடிய சுற்றாடல் கட்டியெழுப்பப்படுவதே அனைவரின் எதிர்பார்ப்பாகும்.

**அஜித்குமார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவ்வாயில் நலமாக இருக்கும் 'பீனிக்ஸ்'

செவ்வாய் கிரகத்தின் வடதுருவ பிரதேசத்தில் வெற்றிகரமாக முதல் தடவையாக தரையிறங்கிய 'பீனிக்ஸ்' விண்வெளியோடமானது, நல்ல நிலையில் காணப்படுவதாக 'நாஸா' நிறுவனம் அறிவித்துள்ளது.

செவ்வாய் கிரகத்திலிருந்து கிடைக்கப் பெற்ற நிழற்படங்கள் மூலம் குறித்த விண்வெளியோடம் நல்ல நிலையில் காணப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்ள முடிந்ததாக 'நாஸா' அறிவித்துள்ளது. அத்தோடு பெறப்பட்ட நிழற்படங்களின்படி, உயர் நெட்டாங்குகளின் அமைவில் மேற்பரப்பை அண்டிய பகுதியில் பனிக்கட்டியான நிலையில் நீர் காணப்படுவதற்கான அடையாளங்கள் தென்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. 2.35 மீற்றர் நீளமுடைய செயற்கை கைகளைக் கொண்ட ரொபோவினால் செவ்வாய்க் கிரக மேற்பரப்பின் பனிக்கட்டிகளை ஆய்வு செய்யும்பணி ஆரம்பிக்கப்படவுள்ளது. குறித்த விண்ணோடத்தில் உள்ள



ரொபோவானது, செவ்வாயின் மேற்பரப்பிலுள்ள மண்ணை அகழ்ந்தெடுத்து அதற்குள் காணப்படுவதாக எதிர்பார்க்கப்படுகின்ற பனிக்கட்டியையும் ஆய்வுக்காகப் பெற்றுக் கொள்ளும் ஆற்றலைக் கொண்டது.

'பீனிக்ஸ்' விண்ணோடம் செவ்வாய் கிரகத்தின் புவியியல் ரீதியான வரலாற்றினை அறிந்து கொள்ளவும் இரசாயனப் பின்னணியைத் தெரிந்து கொள்ளவும் ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளது.

செவ்வாயிலிருந்து பெறப்பட்ட நிழற்படங்களில் காணப்படும் பல்கோண அமைப்புள்ள வடிவங்கள், குறித்த கிரகத்தில் காணப்படும் பனிக்கட்டிகள் விரிவடைதல் மற்றும் சுருக்கமடைதல் என்பவற்றின் மூலமாக தோன்றியுள்ளது என நம்பப்படுகின்றது.



## விண்வெளித் தகவல்கள்

தாரிக் அஸீஸ்



## ஒளி பற்றிய குறிப்பு

சிலர் உங்களைப் பார்த்தவுடனேயே உங்களது வயதைக் கணக்கிட்டுக் கூறுகிறார்கள்தானே. அது எப்படிச் சாத்தியமாகின்றது என்று நீங்கள் யோசித்ததுண்டா? அவர்கள் உங்களின் தோற்றம், தலைமுடியின் நிறம், நீங்கள் கதைக்கும் விதம், நீங்கள் நடந்து கொள்ளும் விதம் என உங்களைப் பல கோணங்களில் இருந்தும் அவதானித்து உங்களின் வயதை ஊகித்துக் கொள்கின்றார்கள்.

அவ்வாறே, விண்வெளியாளர்களாலும் உடுத்தொகுதியொன்றின் வயதை கண்டுபிடித்துச் சொல்லமுடியும். குறைந்தது அங்குள்ள ஒளியினது வயதையாவது அவர்களால் அறிந்து சொல்ல முடியும். உடுத்தொகுதி என்பது பல நட்சத்திரங்கள் ஈர்ப்பு விசையினால் ஒன்றிணைந்து காணப்படும் அமைப்பாகும். அப்படியானால் இந்த அமைப்பின் வயதைக் கண்டுபிடிக்க விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் எவ்வாறான குணாதிசயங்களை அவதானிக்கின்றார்கள் என்று பார்ப்போம்.

ஒளி, அலை வடிவத்திலேயே பயணம் செய்யக்கூடியது. கடலின் அலைகளின் வாயிலாக சக்தி பயணிப்பது போன்றே ஒளி பயணத்தை மேற்கொள்கிறது. ஒளியலைகள் பயணிக்கும் போது, நேரத்துடனும் வெளியுடனும் மாற்றங்களுக்கு உள்ளாகின்றன. அண்டவெளியில் காணப்படும் பொருள்களுக்கிடையிலான தூரம் கூடிக்குறைவது இதன் காரணத்தினாலேயாகும். விரியும் அண்டவெளியூடாகப் பயணிக்கும் ஒளியலைகளும் விரிந்து செல்லும் இயல்பைப் பெறுகின்றன.

எவ்வாறாயினும், அண்டவெளியில் ஒளியானது மாறாத வேகத்தில் பயணிக்கிறது. செக்கனுக்கு 300,000 கிலோ மீற்றர்கள் என்பதே அது பயணிக்கும் வேகமாகும். அதாவது ஒளி ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்குச் செல்ல கொஞ்ச நேரமோ அல்லது அதிக நேரமோ தேவைப்படலாம்.

ஒரு புவி வருடத்தில் ஒளி கடந்து செல்லக்கூடிய தூரமானது, 'ஒளியாண்டு' எனும் விசேட பதங்கொண்டு அழைக்கப்படுகின்றது என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். ஓர் ஒளியாண்டு என்பது மிகப்பெரும் தூரமாகும். சுமார் 9 ட்ரில்லியன் கிலோ மீற்றர்கள் ஆகும்.

ஒளியலைகள் மிகவும் தொலைதூரத்தில் காணப்பட்ட உடுத்தொகுதியிலிருந்து பல பில்லியன் ஆண்டுகளுக்கு முன் பயணிக்கத் தொடங்கி, விரிவடைந்து எமது சூரியத் தொகுதியை அடைந்ததாக அறிவியலாளர்கள் நம்புகின்றனர். சிவப்பு ஒளியலையே அதிகளவில் விரிந்து செல்லக்கூடிய அலையாக இருக்கின்றது.

### பேர்லின் விமான கண்காட்சியில் உத்தேச விண்வெளியோடம்



ஐரோப்பிய விண்வெளி முகவர் நிலையத்தின் மூலம் விண்ணுக்கு ஏவப்படவுள்ள விண்வெளி வீரர்களை ஏற்றிச் செல்லும் உத்தேச விண்வெளியோடமானது, பேர்லின் விமானக் கண்காட்சியில் காட்சிக்காக வைக்கப்படவுள்ளது. அண்மையில் விண்வெளிக்கு விடுவிக்கப்பட்ட 'ஜூலெஸ் வேர்ன்' என்ற விண்வெளியோடத்தின் மாதிரி அமைப்பையொத்து வடிவமைக்கப்பட்டதே இந்த விண்வெளியோடம் என்பது குறிப்பிடத்தக்கது.


தபால் மூல ஆங்கில பாடநெறி ENGLISH Course

நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்தவாறே எம்முடன் இணைந்து ஆங்கிலத்தை சரளமாகவும் தெளிவாகவும் கற்றுக் கொள்ள முடியும்

* கிளாஸ் போகும் காலம் நேரம் மீதுதி / வீண் கட்டணங்கள் இல்லை
* குருகிய காலம் என்பதால் 1 மாதத்தில் பாடநெறியை முடிப்பதால் பயன் இல்லை
* அடிப்படையில் இருந்தே கற்றுக்கொடுக்கப்படும்

பாடநெறியில் இணையும் அனைவருக்கும் அழகிய பேக் ஒன்றும் Tigo Sim Card (தொலைபேசி இணைப்பு) ஒன்றும் வழங்கப்படும்

முதல் இணையும் 500 மாணவ/மாணவிகளுக்கு மாத்திரமே Tigo Sim ஒன்று இலவசம்

இந்த Diploma சான்றிதழ் உங்கள் கல்வித்துறை, மற்றும் தொழில் வாய்ப்புக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கு துணையாக அமையும்

மேலதிக விபரங்களுக்கு பெயர், முகவரியுடன் 15/= பெறுமதியான 2 முத்திரை அனுப்பி பெறலாம்

UNION EDUCATIONAL INSTITUTE

P.O. BOX 143, KANDY, SRI LANKA. Tel: 0773 123 523

மாற்று வழிகளிலோ, மறைமுகமான கட்டணங்களோ அறவிடப்படமாட்டாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்ட நெடுங்காலமாகவே மகாவலி நதி, மல்வத்து ஓய, மாதுறு ஓய போன்ற நதிப்பள்ளத்தாக்குகளிலும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களிலும் நீர்ப்பாசனத்தை அடிப்படையாகக் கொண்டு விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாற்றங்கரைச் சூழலில் இலங்கையின் ஆரம்ப காலத்தில் பல குடியேற்றங்கள் உருவாகி வளர்ச்சி பெற்றன.


புராதன காலத்தில் குட்டகந்ததிஸ்ஸ, முதலாம் அக்போ தாதுசேனன், மகாசேனன், பராக்கிரமபாகு போன்ற மன்னர்கள் மகாவலி நதியின் நீரை இராசரட்டைக்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுத்திருந்தனர். அநுராதபுரமே பொலன்னறுவை காலகட்டத்தில் நன்கு வளர்ச்சி அடைந்த விவசாய நாகரிகம் நிலவிய பிரதேசமாக இருந்தது. அந்நியர் ஆக்கிரமிப்பாலும் இயற்கை அனர்த்தங்களாலும் பிற்காலத்தில் இவ்விவசாய நாகரிகம் வீழ்ச்சி அடைந்தது. அத்தோடு இலங்கைத் தீவில் நெல் உற்பத்தியை அடிப்படையாக வைத்து கட்டி எழுப்பப்பட்ட விவசாயப் பொருளாதாரம் முற்றாக வீழ்ச்சி அடைந்தது. இதனால், அரிசிக்காக அந்நியரிடம் கையேந்தும் நிலை ஏற்பட்டது.

1970 இல் ஆரம்பிக்கப்பட்ட மகாவலி அபிவிருத்தித் திட்டமானது அநுராதபுரம், பொலன்னறுவை யுகத்தின் பின் இந்நாட்டில் ஆரம்பிக்கப்பட்ட பாரிய அபிவிருத்தித் திட்டமாகும். அதன்மூலம் விவசாயப் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மின்சக்தி உற்பத்தியும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் மூலம் உலக உணவு, விவசாய அபிவிருத்தி நிறுவனம் மேற்கொண்ட ஆய்வுகளின் பின் இந்த மகாவலித்திட்டம் மேற்கொள்ளப்பட்டது. அதன்படி 1970 இல் போவதென்ன மற்றும் பொல்கொல்ல திட்ட யோசனை ஆரம்பிக்கப்பட்டது.

## பல்நோக்கு அபிவிருத்தித் திட்டம்

மகாவலி அபிவிருத்தித் திட்டமானது பல்நோக்கு அபிவிருத்தித் திட்டமாகும். இத்திட்டத்தின் மூலம் விவசாய கைத்தொழிலுக்கு நீர்ப்பாசனம் வழங்குதல், நீர்மின்சக்தி உருவாக்குதல், குடியேற்றத் திட்டங்களை உருவாக்குதல், கிராமங்களை கட்டி எழுப்புதல், கைத்தொழிற்சாலைகளை உருவாக்குதல் போன்ற பல்வேறு செயற்பாடுகளை நிறைவேற்றுதலுடன் வெள்ளப்பெருக்கைக் கட்டுப்படுத்தலுமே இதன் முக்கிய நோக்கமாகும்.

# மகாவலியின் மா



ரன்தெனிகலை நீர்த்தேக்கம்



ரன்தெம்பே நீர்த்தேக்கம்



கொத்மலை நீர்த்தேக்கம்

## துரித மகாவலி அபிவிருத்தித் திட்டம்

30 வருடத்தில் பூர்த்தி செய்வதாக ஆரம்பிக்கப்பட்ட மகாவலி அபிவிருத்தித் திட்டம் பின்னர் அதில் பெரும்பகுதியை 5 வருடத்திற்குள் பூர்த்தி செய்ய அரசால் தீர்மானிக்கப்பட்டது. இதன்படி கொத்மலை, விக்டோரியா, இரந்தனிகலை, மாதுறு ஓய மற்றும் தென் இவுரு எல ஆகிய திட்டங்கள் துரித அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டன.

## மகாவலி குடியேற்றம்

மகாவலித் திட்டத்தின் கீழ் 13 வலயங்களில் விவசாய நிலங்கள் வழங்கப்பட்டு அங்கு விவசாயக் குடும்பங்களை குடியேற்றும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. ஒவ்வொரு விவசாயக் குடும்பத்திற்கும் விவசாயத்திற்கான பயிர்நிலம் (வயல்) $2^{1/2}$ ஏக்கரும் மேட்[illegible]லம் 1/2 ஏக்கருமாக 3 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டது. மகாவலி குடியேற்ற நடவடிக்கைகள் 1976 இல் மகாவலி 'H' வலயத்திலிருந்து ஆரம்பமாகின. 2005 இல் 'H' வலயத்தில் 36672 விவசாயக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டன. 2005 இல் மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 145593 குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளதோடு அவற்றில் 90405 விவசாயக் குடும்பங்களும் குடியேற்றப்பட்டுள்ளன.

## மாதுறு ஓய நீர்த்தேக்கம்

மாதுறு ஓயா கடலில் கலக்கும் இடத்திற்கு 48 மைல் முன்னதாக மாதுறு ஓய நதியை தடுத்து அணைகட்டி மாதுறு ஓய நீர்த்தேக்கம் கட்டப்பட்டுள்ளது. இந்நீர்த்தேக்கமானது மாதுறு ஓய பள்ளத்தாக்கு, விக்டோரியா, இரந்தனிகலை ஆகிய நீர்த்தேக்கங்களினால் போஷிக்கப்படுகின்றது. மாதுறு ஓய நீர்த்தேக்கத்தால் 124736 ஏக்கர் நிலத்திற்கு நீர் விநியோகிக்க முடியும். அதில் 115453 ஏக்கர் புதிய ஈரநிலமாகும். மாதுறு ஓய மகாவலி நீ[illegible]தேக்கத் திட்டத்தின் கீழ் 47000 விவசாயக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கு கனடா (Canada) நாடு நிதி உதவி வழங்கியது.

## விக்டோரியா நீர்த்தேக்கம்

ஹுலுகங்க மகாவலி கங்கையுடன் சேரும் முகத்துவாரத்திற்கு சிறிது கீழேயும் விக்டோரியா நீர்வீழ்ச்சிக்கு மேலேயும் விக்டோரியா அணைக்கட்டு நிர்மாணிக்கப்பட்டுள்ளது. 222 மீற்றர் உயரமும் 507 மீற்றர் நீளமும் உள்ள விக்டோரியா எனும் இராட்சத அணைக்கட்டு 'கொன்கிரீட்' அணைக்கட்டாக கட்டப்பட்டுள்ளது. அணைக்கட்டின் இருபுறமும் வளைந்த தோற்றத்தைக் கொண்டு விளங்குகின்றது. இலங்கையின் மிக உயர்ந்த அணைக்கட்டு இதுவேயாகும்.

விக்டோரியா நீர்த்தேக்கம் போஷிக்கும் பிரதேசத்தின் அளவு 730 மைல் என்பதோடு இந்நீரினால் வருடாந்தம் 78 கோடி கிலோவொட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்றது. இந்நீர்த்தேக்கம் 112000 ஏக்கருக்கு மேற்பட்ட வயல் நிலங்களுக்கு நீரை விநியோகிக்கின்றது.


விக்டோரியா ஹக்குருதலையில் அமைக்கப்பட்டுள்ள இந்த நீர்மின் நிலையத்தில் 210 மெகாவொட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்றது. இந்த நீர் மின்நிலையம்



விக்டோரியா நீர்த்தேக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும் சேவை




மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு பங்களிப்பைச் செய்வதோடு இந்நீர் மகாவலி கங்கையுடன் இணைந்து அங்கிருந்து ரந்தெனிகல நீர்த்தேக்கத்துடன் இணைகின்றது. இது பிரித்தானிய அரசின் அனுசரணையுடன் நீர்மாணிக்கப்பட்டது.

## கொத்மலை நீர்த்தேக்கம்

உயர்ந்த மலைகளுக்கூடாக பாய்ந்தோடும் கொத்மலை ஓய வருடாந்தம் 845000 ஏக்கர் நீரை கடலுக்கு கொண்டு செல்கின்றது. இது மகாவலி கங்கையின் கிளை நதியாகும். மகாவலி பல நோக்கு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இங்கு நீர் மின்வலு உற்பத்தி செய்யப்படுகின்றது.

600 மீற்றர் நீளமும் 87 மீற்றர் அகலமும் கொண்ட அணைக்கட்டினால் நிர்மாணிக்கப்பட்ட கொத்மலை நீர்த்தேக்கமானது அங்கிருந்து இராட்சத சுரங்கத்தின் வழியாக நீர்மின் நிலையம் வரை நீரைக் கொண்டு செல்கின்றது. இந்த நீர் பொல்கொல்ல சுரங்கம் ஊடாக மகாவலி கங்கைக்கருகில் அட்டபாகே நிலக்கீழ் மின் நிலையத்திற்கு அனுப்பப்படுகிறது. இலங்கையின் ஒரேயொரு நிலக்கீழ் நீர்மின் நிலையம் இதுவே ஆகும். இத்திட்டத்திற்கு சுவீடன் நாடு உதவி நல்கியது. 201 மெகாவோட் மின்சக்தியை உற்பத்தி செய்த பின் இந்நீர் மகாவலி கங்கையில் மீண்டும் கலந்து அங்கிருந்து பொல்கொல்ல அமுன வரை செல்கின்றது.

நீர் மின் வலுவை உற்பத்தி செய்வதும் இராசரட்டைக்கு திருப்பும் நீரை நிலையாக தேக்கி வைப்பதும் கொத்மலைத் திட்டத்தின் பிரதான நோக்கமாகும். அநுராதபுரம், பொலன்னறுவை மாவட்டங்களைச் சேர்ந்த 200000 ஏக்கர் வயல் நிலங்களும் புதிதாக அறுவடை வயல் நிலங்கள் 91000 ஏக்கரும் இதற்கு உரித்தானதாகும்.

## இரந்தனிகலை நீர்த்தேக்கம்

மகாவலி கங்கையின் கீழ் பகுதியில் தற்போதைய'மினிப்பே' அணைக்கட்டிற்கு 6 மைல் கீழே மகாவலி கங்கைக்கு குறுக்காக பாரிய தடைச்சுவர் எழுப்பி நிர்மாணிக்கப்பட்டுள்ள இரந்தனிகலை நீர்த்தேக்க நீரானது விக்டோரியா அணைச்சுவருக்கு அருகில் வெளியேறுகின்றது. மின் உற்பத்தி மேற்கொள்ளப்பட்ட பின் நீரை மாதுறு ஓய நீர்த்தேக்கத்திற்கும் 'உல்ஹிட்டிய' நீர்த்தேக்கத்திற்கும் அனுப்புகின்றனர். மேற்கு ஜேர்மனியின் நிதி உதவியுடன் இரந்தனிகலை நீர்த்தேக்கம் நீர்மாணிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பொல்கொல்லை திருப்பம்

மகாவலி கங்கை வழியாக பொல்கொல்லையில் அமைக்கப்பட்டுள்ள பாரிய அணைக்கட்டு இதுவாகும். 565 அடி நீளமும் 34 அடி அகலமும் 55 அடி உயரமும் கொண்டது. கலாவெவையின் நீர் கொள்ளளவை விட பன்னிரண்டு மடங்கு நீர் இராசரட்டைக்கு எடுத்து வரும் பொல்கொல்ல அணைக்கட்டிலிருந்து இந்நாட்டிற்கு விவசாயத்துறையின் அபிவிருத்திக்கு மிகமுக்கிய சேவை கிடைக்கின்றது. 200000 ஏக்கருக்கு மேற்பட்ட வயல் நிலங்களுக்கு நீர்ப்பாசனத்தை இது வழங்குகின்றது. அத்துடன் உக்குவெல, போவதென்ன, மொரகஹகந்த ஆகிய நீர் மின் நிலையங்களுக்கு வருடம் முழுவதும் இயங்கும் வகையில் நீர் வழங்குவது இதன் முக்கிய பங்களிப்பாக இருக்கின்றது.

## உல்ஹிட்டிய மற்றும் ரத்கிந்த நீர்த்தேக்கம்


'மினிப்பே' அணைக்கட்டில் திரும்பி தென்பகுதியின் பாரிய கால்வாய் ஊடாக நீரானது முதலாவதாக உல்ஹிட்டிய ஓயவை நோக்கி வரும்.

அங்கு அணைகட்டி சுவர் எழுப்பி நிர்மாணிக்கப்பட்ட 'உல்ஹிட்டி' நீர்த்தேக்கத்தில் 50,000 ஏக்கர் ஈரநிலம் போஷிக்கப்படுகின்றது. மகாவலி இயக்கத்திட்டத்தின் கீழ்முதன்முதலாக விவசாயக் குடும்பங்களுக்கு சில அடிப்படை வசதிகளை மேற்கொண்டு அவர்களை குடியேற்றியது இந்த உல்ஹிட்டிய நீர்த்தேக்கத்திலேயே ஆகும். இதற்கு மிக அருகில் 'ரத்கிந்த' நீர்த்தேக்கம் அமைந்துள்ளது.

## போவதென்ன நீர்த்தேக்கம்

உக்குவலையில் இருந்து அம்பன் கங்கைக்கு வரும் நீர் போவதென்ன நீர்த்தேக்கத்தில் சேமிக்கப்படுகின்றது. 1500 ஏக்கருக்கும் அதிகமான விசாலமுள்ள போவதென்ன நீர்த்தேக்கம் இராசரட்டைக்கு நீரை விநியோகிக்கும் மத்திய நிலையமாக செயல்படுகின்றது. அங்கு அதிகளவு நீர் தம்புள்ளைக்கு அருகில் லெனதொர வரை சுரங்கப் பாதை வழியாக சென்று கலாஓய கரையோரம் வரை செல்கின்றது.

அந்த நீர் 'கொங்ரீட்' கால்வாய் வழியாக ஓடி பின்னர் இரண்டாகப் பிரிந்து ஒரு பகுதி 'தம்புலு' ஓயவிற்கும் மற்றப் பகுதி 'கண்டலம' குளத்திற்கும் செல்கின்றது. தம்புலு ஓய நீர் கலாவெவயில் பிரவேசிக்கின்றது.




## ரன்டெம்பே நீர்த்தேக்கம்

ரன்தெனிகலைக்கு அருகில் 420 மீற்றர் நீளமும் 41.5 மீற்றர் உயரமாகவும் கட்டப்பட்ட அணையின் மூலம் ரன்டெம்பே நீர்த்தேக்கம் நீர்மாணிக்கப்பட்டுள்ளது. ரன்டெம்பே நீர்த்தேக்கத்திலுள்ள நீர்மின் நிலையத்தின் மூலம் 50 மெகாவொட் கொள்ளளவுள்ள மின்சக்தி உற்பத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## கால்வாய் வழி

துரித மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 19 மைல் நீளமான 'நவயோத' கங்கை, விக்டோரியா, ரன்தெனிகலை ஆகிய நீர்த்தேக்கங்களில் பெருக்கெடுக்கும் நீரை தேக்கி வைக்க புதிய 'மினிப்பே' அணைக்கட்டு கட்டப்பட்டுள்ளது. அதுபோலவே மினிப்பேயிலிருந்து உல்கிடிய வரை அமைக்கப்பட்டுள்ள 18.5 மைல் நீளமான தென் பகுதியிலுள்ள யோத எலயானது நாட்டில் இதுவரை கட்டி முடிக்கப்பட்ட கால்வாய்களிலேயே மிகப்பெரியதாகும். மகாவெலி வலயத்திற்கு நீரைக் கொண்டு செல்ல




பல்வேறு வகையான கால்வாய்களும் கட்டப்பட்டுள்ளன.

## மகாவலி பெருக்கெடுக்கும் விதம்

331 கி.மீற்றர் நீளமான மகாவலி நதியானது இலங்கையில் மிகவும் நீளமான நதியாகும். 10448 சதுர கிலோமீற்றருக்கு பரவி உள்ள மகாவலியானது நாட்டின் மொத்தநிலப்பரப்பில் 1/6 பகுதியை ஆக்கிரமித்துள்ளது. நீளம் மற்றும் நீரின் கொள் அளவை கருத்திற்கொண்டு கொத்மலை ஓயவை பிரதான தாய் நதியாக ஏற்றுக்கொள்ளலாம். மகாவலியானது விக்டோரியா நீர் வீழ்ச்சியின் [illegible] ஓடுகிறது.

அங்கு உமா ஓயவும் பதுறு ஓயவும் லுணுகலையில் ஆரம்பமாகும் லொக்கல் ஓயவும் அதில் ஒன்று சேருகின்றன. லொக்கல் ஓய இணைந்தவுடன் வடக்கு நோக்கி அது தனது பயணத்தை ஆரம்பிக்கும் மகாவலி கங்கையுடன் அம்பன் கங்கையும் இணைகின்றது.

'லொக்கல்' ஓயவும் அம்பன்கங்கையும் மகாவலியுடன் கலப்பதோடு ஹசலக மற்றும் ஹீன் ஓயவும் மகாவலி நதியை நன்கு போஷிக்கின்றது. அம்பன் கங்கை இணைவதோடு மகாவலி நதியின் தோற்றம் முற்றாக மாற்றம் அடைகின்றது. அங்கி



ருந்து சமவெளிப் பிரதேசத்தின் ஊடாக மகாவலி கங்கை பாய்ந்தோடுகின்றது. அங்கே 'கவுடுலு' ஓய மகாவலி கங்கையைச் சந்திப்பதோடு அதற்கப்பால் மகாவலி பல கிளைகளாகப் பிரிந்து பாய்ந்தோடுகின்றது. பெரிய ஆறு, கந்தனகாடு ஆறு, வெருகல் ஆறு என்பன இந்த பிரதான கிளைகளாகும். நாட்டில் மிகப்பெரிய மலைகளையும், மத்திய மலைநாட்டையும் கடந்து ஈரவலய தோட்டங்களை செழிப்படைய செய்து பள்ளத்தாக்கு வழியாக நீண்ட பயணத்தை மேற்கொள்ளும் மகாவலியானது கொட்டியாராக்குடாவில் மூதூருக்கருகில் கடலில் கலக்கின்றது.

ப.இரஞ்சித் ஜெயகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜூன் வந்தால்.....



சுற்றாடல் எப்போதும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. காலத்துக்குக் காலம் காலநிலை மாற்றமடையும் அதேவேளை தாவரங்கள், விலங்கினங்களிலும் இந்த மாற்றங்களை நாம் காணக்கூடியதாக இருக்கின்றன. சில மரங்கள் வருடத்தின் குறித்த காலப்பகுதியில்தான் பூத்துக் காய்க்கும். அதேவேளை எமது சுற்றுச்சூழலில் பலவிதமான உயிரினங்கள் இருந்தாலும்கூட அவை சில காலங்களில் தலைமறைவாகியும் விடுகின்றன.

கடந்து சென்ற ஐந்து மாதங்களிலும் நீங்கள் சுற்றுச் சூழலில் ஏற்பட்ட மாற்றங்களை அவதானித்து வந்திருப்பின் மேற்கூறியவைகள் யாவும் உண்மை என உங்களுக்குத் தோன்றியிருக்கும். அந்தவகையில் ஜூன் மாதத்தில் சுற்றுச்சூழலில் ஏற்படப்போகும் மாற்றங்களை நாம் இவ்விதழில் நோக்குவோம்.

## ஜூன் மாதம்

தமிழ் வருடக்கணக்கில் இது 'ஆனி' மாதம் எனப் பெயரிடப்பட்டுள்ளது. சிங்கள வருடத்தில் 'பொசொன்' மாதம் என் அழைக்கப்படுகின்றது. 'க்ரகரியன்' நாட்காட்டியில் ஆறாவதாக விளங்கும் இம்மாதம், 30 நாட்களைக் கொண்டுள்ளது. 'ஜூபிட்டர்' கடவுளின் மனைவியான ரோமானிய கடவுளான 'ஜூனோவை' நினைவு கூருமுகமாகவே இம் மாதத்திற்கு இப்பெயர் சூட்டப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இம்மாதம் 'பூ மழை பொழியும் காலம்' என வர்ணிக்கப்படுகின்றது. சில பிரதேசங்களில் ஓரளவு மழைவீழ்ச்சியும் கிடைக்கும். அத்தகைய பிரதேசங்களில் வயல்வேலைகள் ஆரம்பிக்கப்படுகின்றன.

'முத்து', இந்த மாதத்தில் பிறந்தவர்களுக்கான அதிர்ஷ்டக்கல்லாக விளங்குவதாக சிலர் கருதுகின்றனர். ரோஜா, ஹனிஸக்ல் எனப்படுகின்ற பூக்கள் இம்மாதத்தில் அதிகம் பூக்கத் தொடங்குகின்றன. ஆகவே, ஜூன் மாதமானது 'ரோஜா மாதம்' என்றும் அழைக்கப்படுகின்றது.

மேலும், ஜூன் மாதத்தில் திருமணங்களும் கூடியளவில் நடைபெறுகின்றன. காரணம், இது 'ஜூனோ' கடவுளுக்குரிய மாதம் என்பதனாலாகும். ஜூனோ கடவுள் இம்மாதத்தில் திருமண பந்தத்தில் இணைவோரை





காத்து அவர்களுக்கு ஆசி வழங்குவதாக ரோமானியர்கள் அதிகம் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

இம்மாதத்தில் 5 ஆம் திகதி உலக சுற்றாடல் தினமாகவும் 14 ஆம் திகதி உலக இரத்த தான தினமாகவும் 20 ஆம் திகதி உலக அகதிகள் தினமாகவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

## காலநிலை பற்றி...

தென்மேற்கு 'மொன்சூன்' பருவ மழைக்காலம். இக்காலத்தில் மத்திய மலைநாட்டின் மேற்குப் பிரதேசத்தின் சரிவுப் பகுதிகளில் கடும் காற்றுடன் கூடிய மழை பெய்யும்.

சாதாரணமாக மேல் மாகாணம், சப்ரகமுவ மாகாணம் மற்றும் காலி, மாத்தறை ஆகிய பிரதேசங்களில் காலை வேளைகளில் மழை பெய்யும் வாய்ப்புண்டு. கிழக்கில் அதிகூடிய வெப்பநிலையை உணரக்கூடியதாக இருக்கும். தென் மேற்கூடாக நாட்டினுள் காற்று வீசலாம்.

## வன விலங்குகள் அவதானிப்பு

இனிமையான சத்தத்தில் கீச்சிடும் காட்டுப் பாலகன் பறவை முட்டையிடும் இறுதிக் காலம் ஜூன் மாதமாகும். மாத ஆரம்பத்தில் காடுகளில் எல்லாத் திசைகளிலிருந்தும் ஆண் காட்டுப் பாலகன் பறவைகளின் கீச்சிடும் சத்தத்தைக் கேட்கக்கூடியதாக இருக்கும். பெரும்பாலும் மறைவாகவே வாழும் இப்பறவையினத்தை நாட்டின் உலர் வலயக் காடுகளில் அதிகளவில் காணலாம்.



## உடுத்தொகுதிகளை அவதானிப்போம்

இம்மாதத்தில் இரவு 8.00 மணியளவில் வானில் கடகம், சிம்மம், கன்னி, துலாம், விருட்சிகம், சிறிய நாய், பெரிய நாய், சிலுவை நட்சத்திரம் போன்ற உடுத்தொகுதிகளை அவதானிக்கலாம்.

அதிகாலை 4.00 மணியளவில் விருட்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம், கெசியோபியா போன்ற உடுத்தொகுதிகளை அவதானிக்கலாம்.

## பூத்துக் குலுங்கி காய்க்கும் மரங்கள்

| | |
|---|---|
| ரோஜா | - *Rosa centifolia* |
| தேக்கு | - *Tectona grandis* |
| தங்கத் தூறல் மரம் | - *Cassia fistula* |
| ஆவாரம் பூ | - *Cassia auriculata* |
| வெள்ளை மல்லி | - *Gordania zeylania* |
| சதை கண்டல் | - *Barringtonia acutangula* |
| மா | - *Mangifera india* |
| ரம்புட்டான் | - *Nephelium lappaceum* |
| விளாம்பழம் | - *Limonia acidissima* |
| தூரியன் | - *Durio zbethinus* |
| சீத்தாப்பழம் | - *Anona muricta* |
| மெங்குஸ் | - *Garcinia mangostana* |
| பாணி பூசணிக்காய் | - *Citrallus lanatus* |
| வெரளிக்காய் | - *Elacocarpus serratus* |
| அன்னாசி | - *Ananas comosus* |
| கொடித்தோடை | - *Passiflora edulis* |

-ஜீநு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக உயிரினங்களின் சுவையான தகவல்கள்





மனிதர்களுக்கு மிக நெருங்கிய உறவிலான உயிரினம் "சிம்பன்சி"



நியூசிலாந்தில் உயிர் வாழும் உயரப் பறக்க முடியாத பறவை 'கிவி'



உலகிலேயே மிகப் பெரிய பறவையான "அல்பட்றொஸ்" தன்னுடைய இறகுகளை அடித்துக் கொண்டே தூங்குமாம்



உலகின் மிகச் சிறிய பறவை "ஹமிங் போர்ட்"



சீனாவில் மட்டுமே உயிர் வாழும் மிக அரிதான மிருகம் "பென்டா"



# எறும்பும் வெட்டுக்கிளியும்



வெப்பமான காலத்தில் ஓர் அழகான தினத்தில் வெட்டுக்கிளி ஒன்று அதன் வயலின் மூலம் இசை மீட்டிக் கொண்டிருந்தது. அந்த நேரத்தில் உணவுப் பொதி ஒன்றை சுமந்த படி சென்று கொண்டிருந்த எறும்பு ஒன்று வெட்டுக்கிளியைப் பார்த்து இவ்வாறு சொன்னது. "வெட்டுக்கிளியே விரைவில் குளிர்காலம் வர இருக்கின்றது. எனவே உன்னுடைய வயலினை ஒரு பக்கத்தில் வைத்து விட்டு உணவைத் தேடிக் கொள்" என்றது. அதற்கு வெட்டுக்கிளியும் சிரித்துக் கொண்டே எறும்பைப் பார்த்து கிண்டலாக, "இப்படியான அழகான ஒரு தினத்தில் எதற்காக உணவைத் தேடிக் கஷ்டப்பட வேண்டும்" என்றது. எறும்பும் உடனே தன்னுடைய உணவுப் பொதியை சுமந்து கொண்டு தன்னுடைய வீட்டிற்குச் சென்றது.

குளிர் காலமும் வந்தது.

உணவைத் தேடி வெளியே செல்ல முடியாத அளவிற்கு பனி கொட்டிக் கொண்டிருந்தது. எறும்பு வெப்பமான காலத்தில் அது சேகரித்த உணவுகளை வீட்டிற்குள் இருந்த படியே உண்டு மகிழ்ந்தது. இந்த வேளையில் வெட்டுக்கிளியோ வெளியே உணவைத் தேடிச் செல்ல முடியாமல் வீட்டிற்குள்ளேயே குளிரில் நடுங்கிக் கொண்டிருந்தது. உணவு சிறிது கேட்பதற்காக எறும்பின் வீட்டிற்குச் சென்று கதவைத் தட்டியது. வெட்டுக்கிளியைப் பார்த்த எறும்பு, "நண்பனே நான் உனக்கு கூறிய அறிவுரை உனக்கு ஞாபகம் இருக்கிறதா" என்று சொல்லி கதவை அடித்து மூடி விட்டது.



பார்த்தீர்களா நண்பர்களே வெட்டுக்கிளிக்கு நேர்ந்த நிலைமையை. எனவே நாங்களும் சோம்பல் இல்லாமல், செய்ய வேண்டிய காரியங்களை உரிய தினத்திலேயே செய்து மற்றவர்களை தொந்தரவு படுத்தாமல் இருப்போம்.

# சுள்புளியின் நல்ல பழக்கவழக்கங்கள்



தலைமுடி சிக்குப் பிடித்திருந்தால் சீப்பினால் தலை வாரிக் கொள்ள உங்களுக்கு விருப்பம் இல்லை தானே ? சவர்க்காரம் பாவிப்பதனால் தான் தலைமுடி சிக்குப் பிடிக்கின்றது. சவர்க்காரம் பாவிப்பதால் தலைமுடியில் இருக்கும் போஷாக்கு அழிந்து போகின்றது. அதனுடன் தலைமுடி வறண்டு போவதால் மிகச் சுலபமாக சிக்குப் பிடிக்கின்றது. அப்போது தான் தலை வாரிக் கொள்ளும் போது தலை வலியுடன் தலைமுடி உடைந்தும் போகின்றது.

என்னுடைய தலைமுடிக்கு என்னால் எதுவும் நடப்பதில்லை ஏன் தெரியுமா ? நான் பாவிப்பது லைப்போய் ஷம்பூ. லைப்போய் ஷம்பூவில் உள்ள பால் புரோட்டீன் என்னுடைய தலைமுடிக்கு ஆரோக்கியத்தை மட்டுமல்ல அழகையும் தூய்மையையும் பெற்றுத் தருகின்றது. நீங்களும் பாவித்துப் பாருங்கள். உங்களுக்கும் புரியும் !

## சுள்புளி பரிசு மழை



நண்பர்களே ! சென்ற வாரம் சொன்னது போல இன்று நான் நிறைய பரிசுகளைக் கொண்டு வந்திருக்கிறேன் !

நீங்கள் செய்ய வேண்டியது, இந்தக் கேள்விக்குப் பதில் எழுதி, லைப்போய் சஷே பக்கெட்டுகள் 2 இனை கீழ்க் காணும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

கேள்வி :
சவர்க்காரம் பாவிப்பதால் உங்கள் தலைமுடிக்கு ஏற்படும் கெடுதல்கள் 2ஐ எழுதுங்கள்.

முகவரி :
சுள்புளி பரிசு மழை,
த.பெ.இ. [illegible],
கொழும்பு.


சரியான விடை எழுதும் இருவருக்கு அழகான சுள்புளி பாடசாலைப் பைகளை வெல்லும் வாய்ப்பு! விரைவாக அனுப்புங்கள்.




மெலிதான வலுவிழந்த கூந்தலை, அடர்த்தியாகவும் வலிமை மிக்கதாகவும் ஆக்குகின்றது பால் புரோட்டீன் அடங்கிய லைப்போய் ஷம்பூ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலம்பியா



**அழைக்கப்படும் பெயர்:** *கொலம்பியா*
**கண்டம்:** *தென் அமெரிக்கா*
**வலயம்:** *தென் அமெரிக்காவின் வடமேல் பகுதி*
**எல்லை:** *கிழக்கே வெனிசுவேலாவிற்கும் பிரேசிலிற்கும் தெற்கே ஈக்வடோர், பேரு ஆகிய நாடுகளுக்கும் மேற்கே வட பசுபிக் சமுத்திரத்திற்கும் வடக்கே கரீபியன் கடலுக்கும் எல்லையாக மத்தியில் அமைந்துள்ளது.*






## தரைத்தோற்றம்

கொலம்பியாவின் மொத்த நிலப் பரப்பு 1,141,748 சதுர கிலோ மீற்றராகும். 'அந்தீஸ்' மலைத்தொடரானது நாட்டின் மேற்குப் புறமாகக் காணப்படுகின்றது. இது வடக்கே இருந்து தெற்கு வரை நீண்டு செல்கின்றது. இம்மலை சரிவுகளில் மிக வளமான மண்ணுடன் கூடிய சமவெளிகளும் ஆற்றுப் பள்ளத்தாக்கும் காணப்படுகின்றன. இந்த 'அந்தீஸ்' மலைகளுக்கு மேலதிகமாக மேலும் மூன்று பிரதான மலைப்பிரதேசங்கள் அங்கு உண்டு. இவ் வலயத்திற்கு அருகில் எரிமலைகளும் காணப்படுகின்றன.

'மக்தலோனா' நதி நாட்டின் பிரதான நதியாகும். இந்நதியின் நீளம் 1540 கிலோமீற்றராகும். இதைத் தவிர மேலும் பல சிற்றாறுகளும் காணப்படுகின்றன.



## காலநிலை

கொலம்பியாவின் அமைவிடத்திற்கு ஏற்ப அதன் காலநிலை, பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபடுகின்றது. ஆற்றுப்பள்ளத்தாக்குப் பிரதேசத்தில் வெப்பம் கூடுதலாக இருக்கும். 500 மீற்றர் முதல் 2300 மீற்றருக்கு இடைப்பட்ட உயரமான பிரதேசத்தில் இடைவெப்ப வலயக் காலநிலை நிலவுகின்றது. 2300 மீற்றர் முதல் 3000 மீற்றருக்கு இடைப்பட்ட உயரமான வலயத்தில் மிதமான காலநிலை நிலவுகின்றது. அதைவிட உயரமான பிரதேசங்கள் கடுங்குளிர் நிலவும் இடங்களாகக் காணப்படுகின்றன.

## இயற்கை வளங்கள்

பெருங்காடுகளே நாட்டின் பிரதான இயற்கை வளமாகக் கருதப்படுகின்றன. உலகில் மரகத மாணிக்கம் அதிகமாக கிடைப்பதும் கொலம்பியாவில்தான் என்பதும் குறிப்பிடத்தக்கது. கனிய எண்ணெய் உற்பத்தியும் இங்கு நடைபெறுவதோடு நிலக்கரியும் அகழ்ந்தெடுக்கப்படுகின்றது. தங்கம், வெள்ளி, இரும்புத்தாது, உப்பு, பிளெட்டினம், யுரேனியம் முதலியன இங்கு அதிகம் கிடைக்கின்றன.

## தாவரங்களும் விலங்கினங்களும்

உலகிலேயே தாவரங்கள், விலங்கினங்கள் என உயிரினப் பல்வகைமை அதிகம் காணப்படும் நாடுகளின் வரிசையில் கொலம்பியாவும் உள்ளடங்குகின்றது. எனினும், மிக விரைவாக காடுகள் அழிக்கப்படுவதனால் நாட்டிலுள்ள தாவர, விலங்கின பல்வகைமைத்துவமும் விரைவாக அழிந்து வருகின்றன. கொலம்பியா வனாந்தரங்களில் மாஹோகனி, ஓக், வல்னட், தேவதாரு, பைன் போன்ற வன் மரங்களைப் பரவலாகக் காணலாம். அவ்வாறே பூமா, ஜகுவார், டாபிர், ஆமடில்லா போன்ற மிருகங்களையும் காணலாம்.

## சனத்தொகை

இங்கு பல்வேறு இனத்தவர்கள் வாழ்கின்றனர். இவர்களில் பெரும்பான்மையானோர் 'மெஸ்டிசோ' இனத்தவர்களாவர். இவர்களைத் தவிர வெள்ளை இனமக்களும் கறுப்பினத்தவர்களும் இவை இரண்டும் கலந்த கலப்பினத்தவர்களும் ஓரளவுக்கு வாழ்கின்றனர்.

## மதமும் மொழியும்

கொலம்பியாவின் அரச மொழியாக 'ஸ்பானிய' மொழி திகழ்கின்றது. எனினும், அங்கு வாழும் இந்தியக் கோத்திரத்தார் தமக்கேயுரிய தனித்துவமான மொழியைப் பயன்படுத்துகின்றனர். நாட்டு மக்களில் மிகப் பெரும்பான்மையானோர் ரோமன் கத்தோலிக்க மதத்தைச் சார்ந்தவர்கள். நாட்டின் மொத்த சனத்தொகையில் 96% ஆனோர் ரோமன் கத்தோலிக்கராவர்.

## கலாசாரம்

ஸ்பானியர்களின் வருகைக்கு முன் கொலம்பியாவில் நாகரிகமான கலாசாரம் நிலவியது. அதிகமானவர்கள் விவசாயத்திலும் உலோகக் கைத்தொழிலிலும் ஈடுபட்டு வந்தனர். அவர்களின் வணக்கஸ்தலங்களில் காணப்பட்ட சிலைகளில் சிறந்த கலைத்திறன்களைக் காணலாம். ஸ்பானியர்களின் ஆக்கிரமிப்பை அடுத்து கொலம்பியாவில் கலப்புக் கலாசாரம் உருவானது.










## பொருளாதாரம்

ஆரம்பத்திலிருந்து விவசாயப் பொருளாதாரம் நிலவும் கொலம்பியாவில், கொக்கோ பயிர்ச் செய்கைக்கு முக்கிய இடம் கொடுக்கப்பட்டிருந்தது. 1980களின் பின் திறந்த பொருளாதாரக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டதோடு கைத்தொழில், கனிய எண்ணெய், நிலக்கரி அகழ்வு என்பன நாட்டின் முக்கிய வருவாய்த் துறையாக மாறின.

* **விவசாய உற்பத்திகள்:** கோப்பி, வாழை, கொக்கோ, நெல், புகையிலை, கரும்பு.
* **கைத்தொழில்:** ஆடைக்கைத்தொழில், உணவுப் பொருள் விநியோகம், கனிய எண்ணெய்.
* **ஏற்றுமதிப்பொருட்கள்:** பெற்றோலியம்,கோப்பி, நிலக்கரி, தைத்த ஆடைகள்.
* **ஏற்றுமதி நாடுகள்:** அமெரிக்கா, ஈக்வடோர்.
* **இறக்குமதிப் பொருட்கள்:** பொறியியல் உபகரணங்கள், போக்குவரத்து உபகரணங்கள், நுகர்வுப் பொருட்கள், இரசாயனத் திரவியங்கள்.
* **இறக்குமதி நாடுகள்:** அமெரிக்கா, பிரேசில், மெக்ஸிகோ, வெனிசுவெலா.
* **நாணயம்:** கொலம்பிய பெஸோ (COP)

## நிர்வாகம்

இறுதியாக 1991 இல் கொலம்பியாவின் அரசியல் யாப்பில் மாற்றம் ஏற்பட்டது. ஜனாதிபதியே நிறைவேற்று அதிகாரமுடையவராய்த் திகழ்கின்றார். நான்கு வருடங்களுக்கு ஒருமுறை அவர் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY JAFFNA

# பாழான நிலம்: பாலைவனம்



புவி மேற்பரப்பில் மிகக் குறைந்த மழைவீழ்ச்சியைப் பெறும் பகுதி 'பாலைவனம்' எனப்படுகின்றது. பொதுவாக ஆண்டுக்கு 250 மி.மீற்றருக்கும் குறைவான மழைவீழ்ச்சியைப் பெறும் பகுதிகள் பாலைவனங்களாக இனங்காணப்பட்டுள்ளன. புவியின் நிலப்பரப்பில் 1/3 பகுதி பாலைவனம் ஆகும். இவை வறண்ட நிலப்பகுதிகளைக் கொண்டன. இங்கு பகலில் வெப்பம் மிகுந்தும் இரவில் குளிர் மிகுந்தும் காணப்படும்.

பாலைவனமாதல் என்பது, வறண்ட- ஓரளவு வறண்ட அல்லது ஈரப்பதன் குறைவாக உள்ள பகுதிகள், காலநிலை மாற்றம் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் அதன் தரம் குறைவதைக் குறிக்கும். மனித செயற்பாடுகளே இதற்கு முதன்மையான காரணமாக அமைகின்றன.

உயிரினப் பல்வகைமை இழக்கப்படுதலும் உற்பத்தித்திறன் இழப்பும் பாலைவனமாதலின் முக்கிய தாக்கங்களில் சிலவாகும்.

உலகின் முக்கிய பாலைவனங்கள் சில.....

## கோபி

சீனாவின் வடக்குப் பகுதியிலும் மங்கோலியாவின் தெற்குப் பகுதியிலும் பரவியுள்ள ஆசியாவின் பெரிய பாலைவனம் 'கோபி' பாலைவனமாகும். இது ஏறத்தாழ 1,295,000 சதுர கிலோமீற்றர்களுக்குப் பரந்துள்ளது. இதன் பெரும் பகுதி கற்பாறைகளாகவே காணப்படுகிறது. இங்கு பல முக்கிய தொல்லுயிர் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் உலகில் முதலாவதாகக் கண்டெடுக்கப்பட்ட டைனோசர் முட்டையும் அடங்கும்.

## சஹாரா

ஆபிரிக்காவின் வடபகுதியில் அமைந்துள்ள உலகின் மிகப் பெரிய பாலைவனம் இதுவாகும். இதன்



பரப்பளவு 9,000,000 சதுர கிலோமீற்றர்களாகும் (3,500,000 சதுர மைல்கள்). இந்நிலப்பரப்பானது, ஐக்கிய அமெரிக்க நாடுகள் அளவுக்கு பெரியதாகும். இது ஏறத்தாழ 2.5 மில்லியன் ஆண்டுகள் பழமை வாய்ந்தது. அதற்கு முன் இங்கே ஏரிகளும் ஆறுகளும் இருந்ததாக நம்பப்படுகின்றது.

## தார்

இந்தியாவின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள இப்பாலைவனமானது பஞ்சாப், ராஜஸ்தான், ஹரியானா, குஜராத் ஆகிய மாநிலங்களில் பரவியுள்ளது. பாகிஸ்தானின் ஒரு பகுதிக்கும் பரவியிருக்கும் இப்பாலைவனம், அங்கே 'சோலிஸ்தான்' பாலைவனம் என்று அழைக்கப்படுகிறது. எவ்வாறாயினும் இதன் பெரும்பகுதி (61%) ராஜஸ்தானிலேயே உள்ளது.

- ✱ கலஹாரி - தென் ஆபிரிக்கா
- ✱ நமிப் - தென் ஆபிரிக்கா



- ✱ அந்தாட்டிக்கா - அந்தாட்டிக்கா கண்டத்தின் உட்பகுதி உலகின் மிகப் பெரிய பாலைவனமாக கருதப்படுகிறது.
- ✱ காரா கம் - மத்திய ஆசியாவின் பெரிய பாலைவனம்.
- ✱ டாஷ்-இ லுத் - தென் ஈரானில் அமைந்துள்ள மிகப் பெரிய உவர்ப்பு பாலைவனம்.
- ✱ அரேபிய பாலைவனம் - அரேபிய தீபகற்பத்தின் பல பாலைவனங்களை உள்ளடக்கியுள்ள விசாலமான பாலைவனம் இதுவாகும்.


பாடசாலை செல்லும் மாணவர்களின் ஆங்கில கல்வியை விருத்தி செய்ய அறிமுகமாகிறது

ENGLISH HOME STUDY PACK

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஆங்கில தமிழ் அகராதி, ஆங்கில இலக்கண புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகிறது.

இலங்கையில் முன்னனி தொலைக் கல்வி நிலையமான JEI கல்வி நிலையம் தமிழ் மக்களின் ஆங்கில கல்வி வளர்ச்சியில் கவனம் கொண்டு ஆங்கில கற்கை பொதி ஒன்றை அறிமுகம் செய்கிறது.

சரளமாக ஆங்கிலத்தில் எழுத, பேச, வாசிக்க 45 நாட்களில் வீட்டிலிருந்தவாரே பயிற்சி பெற JEI , English Home Study Pack ஐ பெறுங்கள்.

English Home Study Pack (HSP) ஒன்றில் அடங்குபவை.

☆ 14 ஆங்கில பேச்சு பயிற்சி இலக்கண புத்தகங்கள். ☆ Laminated Bag
☆ Spoken English Video Cd ☆ Talking Guide Audio Cd,
☆ Lifco ஆங்கில தமிழ் அகராதி ☆ English Grammar இலக்கண புத்தகம்
☆ Answer Paper விடை எழுதும் பத்திரங்கள் என்பன அடங்கும்.

14 பாடப் புத்தகங்களிலும் காணப்படும் வினாக்களுக்கு விடை எழுதி அனுப்ப வேண்டும். அவைகளின் பிழை திருத்தப்பட்டு மீண்டும் உங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். இதன் நீங்கள் விடும் பிழைகளை திருத்திக் கொள்ள முடியும்.

யாருக்கு பொறுத்தமானது ...

பாடசலைகளில் ஆண்டு 9 மேல் கல்வி பயிலும் அனைத்து மாணவர்களும் விண்ணப்பிக்க முடியும். கூடுதலான தமிழ் மொழி விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளதால் விளங்கிக் கொள்வது இலகு. பாடசாலையை விட்டு விலகியவர்களும் விண்ணப்பிக்க முடியும்.

Student Identity card இலவசம்

HSP ஐ பெற்று ஆங்கிலம் கற்கும் மாணவர்களுக்கு மாணவர் அடையாள அட்டை இலவசமாக வழங்கப்படும் Pass Port அளவிலான இரு புகைப்படங்களை

Dip in Eng Level 1 & 2 சான்றிதழ்கள

HSP ஐ பெற்று 45 நாட்களில் ஆங்கில பாடநெறியை முடிக்கும் மாணவர்களுக்கு Dip in Eng L1 & L2 சான்றதழ்கள்கள் இலவசமாக வழங்கப்படும்.

HOME STUDY PACK ஒன்றை வீட்டுக்கே பெற்றுக் கொள்வது எப்படி ?

HSP ஒன்று ரூ 1900/- மட்டுமே. எனினும் வங்கியில் / காசுக் கட்டளை மூலம் செலுத்துவதென்றல் ரூ 1600/- மட்டுமே ரூ 300/- ஐ மீதப்படுத்தலாம்.

| வங்கி | கணக்கு இல. | வங்கி | கணக்கு இல. |
|---|---|---|---|
| Commercial | 80-400-52 - 644 | Sampath | 1007-5019-9539 |
| Seylan | 0170-0191-7524-101 | HNB. | 4157-3850-2904-0001 |

Account Holder - Mr. Ramzan Director Jei

வங்கியில் வைப்பு செய்த பின்னர் உங்கள் விபரங்களை 0814- 92 91 93 என்ற இலக்கத்திற்கு அறிவிக்கவும் அல்லது காசுக் கட்டளை மூலம் அனுப்புவதாயின் Director Jei என்ற பெயருக்கு காசுக் கட்டளையை அனுப்பவும்.

அல்லது நீங்கள் HSP ஒன்றை தபால மூலம் உங்களுக்கு அல்லது உங்கள் உறவினருக்கு நண்பருக்கு பெற விரும்பின்

பின்வருமாறு உங்கள் விபரங்களை அனுப்புங்கள்.
VJY இடைவெளி உங்கள் பெயர் முகவரி வயது வீட்டு தொலைபேசி எண் (இருப்பின்) SMS
0727- 806 606



Colombo, Gampaha Kandy மாவட்டங்களில் இருந்து HSP ஐ பெற விரும்பும் மாணவர்களுக்கு வீட்டுக்கே எமது முகவர் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் 0777-806 606

JEI INSTITUTE P.O.BOX.119 KANDY. 0814-92 91 93


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவுஸ்திரேலியாவைக் கண்டுபிடித்த நாடுகாண் பய

# கெ

இங்கிலாந்தைச் சேர்ந்த ஜேம்ஸ் குக் என்ற மாலுமி விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள், ஆராய்ச்சிகளை மேற்கொள்வதிலும் நாடுகளைக் கண்டுபிடிப்பதிலும் அதிக ஆர்வம் காட்டினார். 1768-1779 இற்கு இடைப்பட்ட காலப்பகுதிகளில் தெற்கு பசுபிக் சமுத்திரப் பகுதிகளில் பயணித்து ஆய்வுகளை மேற்கொண்டார்.

இவர் விண்ணில் மின்னும் நட்சத்திரங்களின் உதவியுடன் பாதையை கண்டறிந்தே கடற் பிரயாணத்தை மேற்கொண்டுள்ளார். இந்த பிரயாண வழிமுறையானது எதிர்கால கடலோடிகளுக்கு முக்கிய வழிகாட்டலாக அமைந்தது. இவர் கடற்பிரயாணத்தை முடித்து நாடு திரும்பும்போது அந்தந்தப் பகுதிகளில் தென்பட்ட உயிரினங்கள், தாவரங்கள், அவற்றின் சுவட்டுப் பதிவுகள் பற்றிய தகவல்களையும் படங்களையும் உடன் கொண்டுவந்தார். அவரது கடற் பிரயாணங்களும் அதன்போது கண்டறிந்த விடயங்களும் அறிவியல் ஆய்வுக்கும் முன்னேற்றத்திற்கும் பெரிதும் உதவின.

## வாழ்க்கை

1728 இல் பிறந்த ஜேம்ஸ் குக், சாதாரண விவசாயி ஒருவரின் மகனாவார். இவர் இளவயதில் கப்பல் உரிமையாளர் ஒருவரின் உதவியாளராக கடமையாற்றினார். கடற்பிரயாணத்தில் அதிக ஆர்வமுடையவராக இருந்தார். அவ்வப்போது கப்பல் உரிமையாளரின் கைவேலையாளராக கடற் பிரயாணங்களில் ஈடுபட்ட அவர், கப்பல் ஓட்டவும் கற்றுக்கொண்டார். கடலில் பிரயாணம் செய்யும்போது வானத்தில் மின்னும் நட்சத்திரங்களின் உதவியுடன் பிரயாணம் செய்யும் கலையையும் அதுபற்றிய அறிவையும் அவர் கற்றுக்கொண்டார்.

1775 ஆம் ஆண்டு இங்கிலாந்தின் கடற்படையில் இணைந்தார். இக்காலப் பகுதியில் கனடாவில் வாழ்ந்த ஆங்கிலேயருக்கும் பிரான்ஸியருக்கும் இடையில் எல்லைப் பிரச்சினையை மையமாக வைத்து போர் ஒன்று நிகழ்ந்தது. இந்த யுத்தத்திற்கு உதவுவதற்காக கனடாவின் சென் லோரன்ஸ் நதி ஊடாக இங்கிலாந்தில் இருந்து அனுப்பப்பட்ட கடற்படையில் ஜேம்ஸ் குக் உம் ஒருவராக இருந்தார். இந்த யுத்தத்தில் பங்கு கொண்டு திறமைகளை வெளிப்படுத்தியதால் மிகக் குறுகிய காலத்தில் அவரால் 'மார்கரி' என்ற கப்பலின் மாலுமியாகும் வாய்ப்புக் கிடைத்தது.





எண்டிவர் கப்பல்

கெப்டன் ஜேம்ஸ் குக்கின் வரையப்பட்ட படம்

## வீர சாகசப் பயணம்

1760 ஆம் ஆண்டு காலப் பகுதியில் சிறந்த கடலோடி என்ற பெருமையை குக் தனதாக்கிக் கொண்டார். அவர் கடற்பிரயாணம் செய்வதில் பெற்றுக்கொண்ட அறிவும் அனுபவமும் ...
யாணத்திற்கு வழிவகுத்தது. ...ம்மூன்று க...
தெற்கு திசைகளை நோக்கியதாகவே அ...

## முதல் ஆராய்ச்சி...

தனது முதலாவது கடல் ஆராய்ச்சிப் பய...
கப்பலைத் தேர்ந்தெடுத்தார். இக்கடல் வழி...
ஆண்டு ஓகஸ்ட் 26 ஆம் திகதி நிகழ்ந்தது. ...
ஆகும். அவர் மேற்கொண்ட இக்கடல் வழ...
னிகள் சிலரையும் இரண்டு சித்திரக் கலை...
கடற்படை நண்பர்கள் சிலரையும் சேர்த்து...

வெள்ளிக்கிரகம் சூரியனைச் சுற்றி வருவ...
நடத்துவதும் அதனோடு சம்பந்தப்பட்ட வ...
கொள்வதென்பதுமே இக்கடற் பிரயாணத்...
தன. அதன்படி, இங்கிலாந்தின் 'பிலிமவுத்'...
பமாகி டஹிடித்தீவு, ரஷ்யா, சைபீரியா, அ...
ஆகிய பிரதேசங்களுக்குச் சென்று ஆய்வுக...

இந்த ஆராய்ச்சிக்காக குக்குடன் சில வா...
றிருந்தனர்.

வெள்ளிக்கிரகம் அதன் பாதையில் நகர ...
டைந்து அங்கு பாதுகாப்புக் கோட்டையெ...
ஒன்றையும் நிறுவ ஏற்பாடாகியிருந்தது. ...
குறுக்கேயான நகர்வு 1769, ஜூன் 03 ஆ...


ஆனால், பிரயாணம் எதிர்பார்த்ததை வி...
இருந்தது. கடும் குளிர் காரணமாக கப்பலி...
பேர் இறந்துவிட்டனர். எவ்வாறாயினும் கு...
பணியை சீராக நிறைவேற்ற அவர் தவறவி...
ஆய்வுக்காக நிலையம் ஒன்றை அமைத்து ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY JAFFNA

# ...பயணி

# கப்டன் ஜேம்ஸ் குக்



...னுபவமும் உலகில் மிக நீண்ட 3 கடற்பிர
...ம்மூன்று க... பிரயாணங்களும் மேற்கு,
...ாகவே அமைந்தன.

## ...ராய்ச்சிப் பயணம்

...ராய்ச்சிப் பயணத்திற்காக 'என்டிவர்' என்ற
...இக்கடல் வழிப்பயணம், 1768 ஆம்
... நிகழ்ந்தது. அப்போது அவரின் வயது 40
... இக்கடல் வழிப்பயணத்தின்போது விஞ்ஞா
...த்திரக் கலைஞர்களையும் மற்றும் முக்கிய
...யும் சேர்த்துக் கொண்டார்.
... சுற்றி வருவது தொடர்பாக ஆராய்ச்சி
...ந்தப்பட்ட வானியல் ஆய்வுகளை மேற்
... பிரயாணத்தின் குறிக்கோள்களாக அமைந்
...ள 'பிலிமவுத்' துறைமுகத்தில் இருந்து ஆரம்
...சைபீரியா, அபிசீனியா, நியூசிலாந்து,
...ன்று ஆய்வுகள் தொடரப்பட்டன.
...டன் சில வானியல் ஆய்வாளர்களும் சென்

...தையில் நகர முன்னர் குறித்த தீவைச் சென்ற
...காட்டையொன்றையும் ஆய்வு மையம்
...யிருந்தது. வெள்ளியின் சூரியனுக்குக்
...ூன் 03 ஆம் திகதி நிகழ்வதாக இருந்தது.
...ார்த்ததை விடவும் கடினமானதாகவே
...மாக கப்பலில் பயணம் செய்த இரண்டு
...றாயினும் குக்கிடம் ஒப்படைக்கப்பட்ட
...அவர் தவறவில்லை. அவர் விண்வெளி
...ற அமைத்து வானியல் ஆய்வாளர்கள் இரு

வரை அங்கு நிறுத்தி, ஆராய்ச்சிகளை மேற்கொண்டார்.

விண்வெளி ஆய்வுகள் நிறைவானதைத் தொடர்ந்து குக் நியூசிலாந்தை நோக்கிய கடல்வழிப் பயணத்தைத் தொடர்ந்தார். நியூசிலாந்தை அடைந்த கப்பல் அங்குள்ள சிறிய கால்வாய் ஒன்றில் நங்கூரம் இட்டது.

ஆனாலும், அங்கு வாழ்ந்த 'மஓரியர்கள்' என்ற இனத்தவர்கள் அவர்களை அங்கு இறங்கவிடாது தடுத்து நிறுத்தினர். அதனால், அப்பகுதிவாசிகளுடன் கலவரம் மூண்டது. அங்கிருந்து தப்பிய குக் கப்பலைத் திசை திருப்பி அவுஸ்திரேலியாவின் கிழக்குக் கரையை வந்தடைந்தார்.

## தாவரவியல் ஆய்வாளர்கள்

குக்குடன் ஆய்வுப் பிரயாணத்தில் சென்ற குழுவினருள் தாவரவியல் ஆய்வாளரொருவரும் அடங்குகின்றார். அவரது பெயர் ஜோஸப் பேன்க்ஸ் என்பதாகும். பசுபிக் கடல் பிராந்தியத்தில் தென்படும் தாவரங்கள் தொடர்பாக ஆராய்ச்சி செய்து தகவல்களைத் திரட்டுவது இவர்களது நோக்கமாக இருந்தது.

அவுஸ்திரேலியாவை வந்தடைந்த அவர்கள், அங்கு புதிய தாவரங்கள் மற்றும் உயிரினங்கள் பலவற்றைக் கண்டறிந்தனர். கண்டறியப்படாத தாவரங்கள் அதிகளவில் காணப்பட்ட பிரதேசத்திற்கு 'தாவரவியல் வளைகுடா' (Bay of Botany) என்று பெயரிட்டனர். குக்கின் இப்பகுதிக்கான விஜயத்தின் பின்னர் அங்கு ஆங்கிலேயர் குடியேற்றமும் ஏற்பட்டது. 1771 ஆம் ஆண்டு ஜூலை 12 ஆம் திகதி குக் தமது பிரயாணத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு மீண்டும் இங்கிலாந்து திருப்பினார்.







குக்கின் படம் பொறித்து வெளியான நாணயக் குற்றிகளும் முத்திரைகளும்







## இரண்டாவது ஆய்வுச் சுற்றுலா

1772 ஆம் ஆண்டு குக் தமது இரண்டாவது கடற்பிரயாணத்தை மேற்கொண்டார். இந்த ஆராய்ச்சி சுற்றுலாவுக்கு 'ரிசொலியுஷன்' (Resolution), 'அட்வென்சர்' (Adveture) ஆகிய பெயர்களிலான இரண்டு கப்பல்கள் ஈடுபடுத்தப்பட்டன. இப்பிரயாணத்தில் மேலும் பல விஞ்ஞானிகளும் கலந்து கொண்டனர்.


ஆபிரிக்காவுக்கு தெற்காக இன்னுமொரு சமுத்திரம் அமைந்திருக்கின்றதா? என்பதைக் கண்டறிவது இச்சுற்றுப் பிரயாணத்தின் நோக்கமாகும். அவ்வாறே இப்பகுதியில் ஒரு தீபகற்பம் இருக்குமானால் அங்கு நிலவும் தட்பவெப்ப நிலை, மக்களின் வாழ்க்கை முறை, அவர்களுடனான வர்த்தக நடவடிக்கைகள் என்பன தொடர்பான தகவல்களைத் திரட்டுவது இப்பயணத்தின் பிரதான பின்னணிக் காரணிகளாக அமைந்தன.

அவர் ஆபிரிக்காவின் தெற்கு சமுத்திரத்தைச் சுற்றி 1250 மைல்கள் பிரயாணம் செய்தார். அப்பிரதேசத்தில் பனிப்பாறைகள் காணப்பட்டதால் பிரயாணம் சிரமமானதாக இருந்ததோடு அப்பகுதியை சுற்றி வந்ததில் எதிர்பார்த்த தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை. அங்கிருந்து 'ஃப்ரெண்ட்ஸ்' தீவையும் தென்துருவ பனிப்பாறைப் பிரதேசத்தையும் சுற்றி வந்ததையடுத்து தமது சுற்றுப் பிரயாணத்தை பூர்த்தி செய்து கொண்டு நாடு திருப்பினார்.

## மூன்றாவது ஆய்வுப் பயணம்

1776 ஆம் ஆண்டு அவரின் மூன்றாவது ஆய்வுப் பயணம் மேற்கொள்ளப்பட்டது. 'ரிசொலியுஷன்' மற்றும் டிஸ்கவரி (Discovery) ஆகிய கப்பல்கள் இதன்போது ஈடுபடுத்தப்பட்டன.

இம்முறை வட பசுபிக் சமுத்திரப் பரப்பில் பயணித்து வடக்கிற்கான கடல் மார்க்கப் பாதையைக் கண்டுபிடிப்பதே நோக்கமாயிருந்தது. அவர் வழக்கமாக பயணிக்கும் 'கேப்' முனை ஊடாக நியூசிலாந்தை அடைந்து அங்கிருந்து 'டய்ட்' தீவை அடைந்தார். இப்பயணத்தின் போதே 'ஹவாய்' தீவுக் கூட்டங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இப்பகுதி ஏலவே ஸ்பானியரால் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது. அப்பகுதியில் தரையிறங்கிய குக்கையும் அவரது குழுவினரையும் அங்கு வாழ்ந்த மக்கள் நல்ல முறையில் வரவேற்றனர்.



ஜோஸப் பேன்க்ஸ்

அங்கிருந்து வட அமெரிக்க கடல் பரப்பில் பயணம் தொடரப்பட்டபோதும் பனிப்பாறைகள் காரணமாக பயணத்தை இடைநிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. அவர் தனது மூன்றாவது பிரயாணத்தை முடித்துக்கொண்டு இங்கிலாந்து திரும்பும் வழியில் ஹவாயில் அவர்களுக்கு அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது.

அந்தத் தீவிலுள்ளவர்களிடையே தாம் வழிபடும் கடவுள் என்றோ ஒருநாள் பிரமாண்டமான கடல் கலம் ஒன்றில் ஏறி அந்த மக்களிடம் வரலாம் என்ற ஊகங்கள் நிலவியிருந்தது. குக் அங்கு சென்றபோது அவர்கள் அது தமது கடவுள் தான் என நினைத்து வழிபாடுகளை நடத்தி குக்கை வரவேற்றனர்.



ஹவாய் சுதேச குடிகள்

## குக்கின் மரணம்

ஹவாயிலிருந்து இங்கிலாந்து நோக்கி வரும் வழியில் கடல் புயல் காரணமாக கப்பலை மீண்டும் 'ஹவாய்' நோக்கித் திருப்பினார். இரண்டாவது முறையாக ஹவாய் திரும்பிய குக்கிற்கு முன்னர் கிடைத்த வரவேற்பு அங்கு கிடைக்காவிட்டாலும் அரசனும் பரிவாரங்களும் அவர்களை ஆதரித்தனர். அங்கு 'ஹவாய்' வாசி ஒருவர் குக் குழுவினர் சென்ற கப்பலுக்குரிய படகொன்றைத் திருடியதால் அப்பகுதிவாசிகளுக்கும் குக்கின் ஆட்களுக்கும் இடையில் கலவரம் மூண்டது. அப்போது கலவரக்காரர் ஒருவர் குக்கின் தலையில் தடியொன்றால் தாக்கியதால் ஏற்பட்ட காயம் காரணமாக குக் உயிரிழந்தார். முன்னர் கடவுள் என்று பூஜித்த அத்தீவு வாசிகள் இப்போது குக்கின் உடலை துண்டு துண்டாக கீறினர். பின் மதகுருமார் சிலரும் இணைந்து குக்கின் உடம்பை கடலில் வீசினர். எஞ்சியவர்கள் அரசனுடன் சமாதானமாகி அங்கிருந்து ஆசிய கடல் மார்க்கமாக இங்கிலாந்தை வந்தடைந்தனர். ஆனாலும் குக் இல்லாமல் மீண்டும் வந்த குழுவினரைக் கண்ட இங்கிலாந்துவாசிகள் சோகத்தில் மூழ்கினர்.

## கடல் மார்க்கங்களைக் கண்டறிதல்

விண்ணில் ஜொலிக்கும் நட்சத்திரங்களை வைத்து மேற்கொள்ளப்படும் குக்கின் கடல்வழிப் பயண கண்டுபிடிப்பு முறையானது அக்காலத்தில் பெரும் செல்வாக்குப் பெற்றிருந்தது.

## விற்றமின் குறைபாட்டுக்கான தீர்வு

குக்குடனான கடல் பிரயாணத்தின்போது அவருடன் சென்றவர்களின் முரசுகளில் வெடிப்புகள், உடம்பில் புண்கள், வீக்கம் என்பன ஏற்பட்டபோது கப்பல் நங்கூரமிட்ட தீவுப்பகுதியிலிருந்து புதிய பழங்களை ஆய்ந்து அவர்களுக்கு உண்ணக் கொடுத்தார். அதன்மூலம் விற்றமின் குறைபாட்டால் ஏற்பட்ட உடல் பலவீனங்களுக்கு பரிகாரம் அளிக்கப்பட்டது.

**அமீர் ஹுஸைன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்மை தந்த பரிசு

மாதவன் ஓர் ஏழைச் சிறுவன் தரம் எட்டில் கற்கும் அவன் தனது தந்தையை இழந்தவன். இதனால், மாதவனின் தாய் அயராது உழைத்து அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தில் மாதவனைப் படிக்க வைத்தார். மாதவன் படிப்பில் கெட்டிக்காரன். அவனின் தாய் 'உண்மையே பேசு, நேர்மையாக இரு' என இரு விடயங்களை அவனுக்கு உபதேசித்து இருந்தார். அவனும் இம்மொழிகளை வேத வாக்காக கொண்டு வாழ்ந்து வந்தான்.

ஒருநாள் பாடசாலையில் காலைக் கூட்டம் முடிந்ததும் வகுப்பாசிரியர் "இன்னும் ஒரு மாதத்தில் பரீட்சை நடைபெறவுள்ளது. எனவே, அறுபது ரூபா கட்டணம் செலுத்துங்கள். இல்லாவிடில் பரீட்சை எழுத முடியாது" என்று கூறினார்.



இதைக் கேட்ட மாதவன் தனது வறுமை நிலையை நினைத்து மிகவும் கவலைப்பட்டான். பாடசாலை முடிந்ததும் மாதவன் கடைசியாக சிந்தித்தபடி வந்து கொண்டிருந்தான். அப்போது பாடசாலையின் பிரதான வாயிலருகே நூறு ரூபா தாளொன்று கிடப்பதைக் கண்டான்.

மாதவனுக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. அறுபது ரூபாவைக் கட்டணமாகக் கட்டிவிடலாம் என மனம் திட்டமிட்டது. எனினும், அதே கணத்தில் தாயின் உபதேசங்கள் அவனுக்கு நினைவுக்கு வந்தன. 'பிறர் பொருளுக்கு ஆசை வைக்கிறாய்' என்று மாதவனின் உள்மனம் அவனை எச்சரித்தது. மனத் தெளிவுற்ற மாதவன் அதிபரின் அறைக்குச் சென்று அதிபரிடம் பணத்தைக் கையளித்து நடந்ததைக் கூறினான். அதிபர் மிகவும் மகிழ்ச்சியடைந்து அவனைப் பாராட்டினார்.

இச்சம்பவம் நடந்து மூன்று தினங்களின் பின் பரிசளிப்பு விழா நடைபெற்றது. பல மாணவர்களும் பரிசு பெற்றனர். பின்னர் ஒலிவாங்கியில் இவ்வருடத்துக்கான சிறந்த மாணவனுக்கான பரிசு தரம் எட்டில் கற்கும் மாதவனுக்கு என்று அறிவிக்கப்பட்டு காரணமும் கூறப்பட்டது. மாதவனுக்கு பல புத்தகங்களும் 500/= பணமும் வழங்கப்பட்டன. நேர்மையான தனது நடத்தையால் தனக்குக் கிடைத்த பரிசை எண்ணி மிகவும் மகிழ்ந்தான் மாதவன்.

எப்.எஸ்.ருமைஸா,
தரம் - 9C,
அறபா தேசிய பாடசாலை, வெலிகம

## விஞ்ஞான விளக்கங்கள்



1. கரப்பான் பூச்சி, சிலந்தி போன்றவை உறங்கும்போது கண்களைத் திறந்து கொண்டே உறங்குகின்றன.

**✱ இக் குடும்பத்தைச் சேர்ந்த பூச்சிகளுக்கு இமைகள் இல்லை. இதனால், இவை உறங்கும் போது கண்கள் திறந்த படியே இருக்கின்றன.**

2. கர்ப்பிணித் தாய்மார்கள் நேராக படுத்துத் தூங்குதல் கூடாது.

**✱ நேராக படுத்துத் தூங்கும் போது தாயின் இரத்தக் குழாய்கள் கர்ப்பப்பையை அழுத்துவதால் இதயத்திற்குச் செல்லும் குருதியின் அளவு குறையும். இதனால், கருவிலுள்ள குழந்தைக்குச் செல்லும் குருதியின் அளவு குறையும். எனவே, கர்ப்பிணிகள் இதயம் உள்ள இடது புறமாக ஒருக்களித்துத் தூங்குதல் வேண்டும்.**

3. பஸ்ஸிலுள்ள பெயர்ப்பலகை கறுப்பு நிறம் கொண்டதாகவும் எழுத்துக்கள் மஞ்சள் நிறமானதாகவும் காணப்படுகின்றன.

**✱ குறைந்த ஒளியிலும் கூடிய தூரத்திலும் பார்ப்பதற்கு ஏற்றதாக இந்நிறங்கள் காணப்படுவதால் தெளிவாகப் பார்க்கக்கூடியதாக இருக்கும்.**

4. இரவு நேரத்தில் கடல் நீர் சூடாக இருக்கும்.



**✱ பகல் வேளையில் சூரிய ஒளியால் கிடைக்கும் வெப்பம் கடல் நீரினால் அகத்துறிஞ்சப் படுகிறது. இதனால், இரவு வேளையில் இவ்வெப்பம் வெளிவிடப்படுகின்றது.**

தொகுப்பு :
எஸ்.எச்.எம்.ஸாமில் ஹமீட்,
மெத்தேகெடிய,அளஹிடியாவ.



## நற்குணங்கள் சில....

- **✱ கிளி போல இனிமையாகப் பேசுங்கள்.**
- **✱ கொக்குப் போல் ஒருமையாக இறைவனை நினையுங்கள்.**
- **✱ ஆடுபோல் நன்கு மென்று உண்ணுங்கள்.**
- **✱ யானை போல் குளியுங்கள்.**
- **✱ நாயைப் போல் நன்றியுடன் நடந்து கொள்ளுங்கள்.**
- **✱ காக்கையைப் போல் குறிப்பறிந்து கொள்ளுங்கள்.**
- **✱ தேனீயைப் போல் உழையுங்கள்.**
- **✱ எறும்பு போல் சுறுசுறுப்பாய் இருங்கள்.**
- **✱ தவறு செய்பவர்களை மன்னியுங்கள்.**
- **✱ அன்பே தெய்வம் என்று உணருங்கள்.**

**ஆக்கம்: மு.உமாகாயத்ரி,
பது/ஊவா விஞ்ஞானக் கல்லூரி,
ஹாலி-எல.**

## சேவல் இருந்தாலே நல்லது

ஒரு கிராமத்தில் பணக்கார எஜமானி ஒருவர் இருந்தார். அவருடைய வீட்டில் வேலைகள் செய்வதற்கு பல வேலைக்காரிகள் இருந்தார்கள். அந்த எஜமானி மிகவும் கண்டிப்பானவர். தினமும் காலையில் சேவல் கூவும் போது வேலைக்காரப் பெண்களை எழுப்பி விடுவார்.



இது அந்த வேலைக்காரிகளுக்கு கஷ்டமாக இருந்தது. "இந்தச் சேவல் அதிகாலையில் கூவுவதால் தானே எஜமானி எம்மை எழுப்புகிறாள். அது இல்லாவிட்டால் எப்படி எழுப்புவாள்?" என்று நினைத்தனர்.

அதனால், ஒருநாள் இரவு அந்த சேவலை எல்லோருமாகச் சேர்ந்து கொன்று புதைத்து விட்டனர். "இனி அதிகாலை சேவலும் கூவாது எஜமானியும் எழுப்பமாட்டாள். நாங்கள் சந்தோசமாக விடியும் வரை தூங்கலாம்" என்று வேலைக்காரிகள் நினைத்து மகிழ்ந்தனர்.

கண் அயரும் நேரத்தில் எஜமானியின் குரல் கேட்டது. "இப்போதுதான் படுத்தேன். இன்னும் பொழுது விடியவில்லை" என்று வேலைக்காரிகளில் ஒருத்தி குரல் கொடுத்தாள். "அப்படியா? நான் விடிந்து விட்டது என்று நினைத்தேன். சரி பரவாயில்லை. நீங்கள் தூங்குங்கள்" என்றவாறே கண்ணயந்தார் எஜமானி.

ஒரு அரை மணிநேரத்தின் பின் மீண்டும் எஜமானியின் குரல் கேட்டது. திடுக்கிட்டு கண் விழித்தனர் வேலைக்காரிகள். "அம்மா இன்னும் விடியல்லை. இப்போது நேரம் பதினொரு மணி" என்றனர்.

"அப்படியா? நான் விடிந்துவிட்டது என்று நினைத்தேன்...."

இப்படி இரவெல்லாம் தூங்காமல் எஜமானி பல தடவைகள் வேலைக்காரிகளை எழுப்பி விட்டார். அப்போதுதான் அவர்களுக்கு ஒன்று புரிந்தது.

"இதைவிட சேவல் இருந்தாலே நல்லது. அது கூவும் வரையாவது நிம்மதியாகத் தூங்கியிருந்தோம்! இப்போது சேவலை அநியாயமாகக் கொன்று விட்டோமே" என்று மிகவும் வருந்தினர்.

***எதனையும் செய்யும் முன் பின்னுள்ள விளைவை சிந்தித்துப் பார்க்கவேண்டும்.***

தொகுப்பு: ஏ.எச்.எஸ்.ரினோஸா,
தரம் - 10B,
ப/சேர் ராசிக் பரீட் ம.வித்.,
பண்டாரவளை.

## தந்தையர்கள்


- ✱ கணினியின் தந்தை -சாள்ர்ஸ் பாபேஜ்
- ✱ பரிசோதனை முறை விஞ்ஞானத்தின் தந்தை -பிரான்ஸிஸ் பேக்கன்
- ✱ கணிதத்தின் தந்தை -ஆர்க்கிமிடிஸ்
- ✱ மின்சாரத்தின் தந்தை -மைக்கல் ஃபரடே
- ✱ உயிர் இரசாயனவியலின் தந்தை -பிரடெரிக் ஜி.கொப்கின்ஸ்
- ✱ சாரணிய இயக்கத்தின் தந்தை -பேடன் பவல் பிரபு
- ✱ பக்ற்றீரியாவின் தந்தை -லூயி பாஸ்டர்
- ✱ தட்டச்சின் தந்தை -கிறிஸ்டோபர் லதாம் ஷோல்ஸ்
- ✱ வெள்ளைப்பிரம்பின் தந்தை என சிறப்பிக்கப்படுபவர் -ஜின் டிலேக்
- ✱ நவீன ஓவியங்களின் தந்தை -பிக்காசோ

தொகுப்பு: பி.மொனிக்கா கிஷாந்தி,
தரம் 11B, கொ/புனித அன்னம்மாள் த.ம.ம.வித்., கொழும்பு-13.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




## கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



கே.எஃப்.ஃபஸ்லா,
தரம் - 7,
கு/ஹதிராவளான ம.வித்.,
வெள்ளவ.




எஸ்.ரீ.கீதா,
தரம் - 10$^{A}$,
கு/அல்-இர்ஃபான் ம.கல்.,
பொல்கஹவளை.



என்.மாஹிரா,
க.பொ.த (உ/தர),
மனாள் த.ம.ம.வித்.,
புத்தளம்.




அ.கா.பாரீஸ்,
கிண்ணியா-08.



பீ.நிரோஷன்,
தரம் - 9,
கொ/ஹெல்பொட வடக்கு
த.வித்.,
கட்டிக்குதுல.



ஜே.ரேவதி,
தரம் - 11,
க/தொலஸ்பாகே த.ம.வித்.,
கண்டி.



எம்.ஏ.எம்.றஹ்மி,
தரம் - 4$^{A}$,
கழுகமுவ மத்திய கல்.,
கெலிஓயா.



எம்.ஆர்.எஃப்.றிஸ்னா,
தரம் - 5,
கா/தாஸிம் கல்லூரி,
காலி.



அங்.இல : 1947

ஏ.பீ.எம்.முஸக்கீர்,
க.பொ.த (சா/தர),
தி/அஷ்ரஃப் ம.வித்.,
இறக்காமம்.



அங்.இல : 1948

ஆர்.அஜந்தன்,
தரம் - 7,
மட்/புனித மிக்கேல் கல்.,
மட்டக்களப்பு.



அங்.இல : 1949

எம்.ஏ.எம்.ஷாகிர்,
தரம் - 5,
பது/பசறை முஸ்லிம் வித்.,
பசறை.



அங்.இல : 1950

யதுகரன்,
தரம் - 9$^{B}$,
கிளி/இராமநாதபுரம் ம.வித்.,
கிளிநொச்சி.

# விஜய் மாணவர் கழகம்



அங்.இல : 1951

எம்.இஸட்.எம்.நஜாத்,
தரம் - 11$^{A}$,
குருந்துகஹஎல ம.வித்.,
அக்குறனை.



அங்.இல : 1952

சி.கஜந்தினி,
தரம் - 12$^{(கலை)}$,
பூநகரி நல்லூர் ம.வித்.,
பூநகரி.



அங்.இல : 1953

எம்.எஸ்.எம்.அக்ரம்,
தரம் - 3$^{A}$,
சுலைமானியா ம.கல்.,
கன்னந்தோட்டை.



அங்.இல : 1954

முருகானந்தன் தனிஸ்டன்,
தரம் - 6$^{B}$,
யா/கொக்குவில் இந்துக் கல்.,
கொக்குவில்.



அங்.இல : 1955

தியாகராஜா சிந்துயன்,
தரம் - 9$^{F}$,
யா/மத்திய கல்.,
யாழ்ப்பாணம்.



அங்.இல : 1956

எம்.டி.எம்.அஸ்லம்,
தரம் - 6,
ஸாஹிரா வித்.,
குருவிட்ட.



அங்.இல : 1957

உதயணன் அச்சுதன்,
தரம் - 7$^{B}$,
கிளி/இராமநாதபுரம் மேற்கு
அ.த.க.பா., கிளிநொச்சி.



அங்.இல : 1958

க.கஸ்தூரி,
க.பொ.த (உ/தர),
இந்து மகளிர் கல்.,
யாழ்ப்பாணம்.




தி/கிண்ணியா மத்திய கல்லூரியில் கடந்த வருடம் நடைபெற்ற கணினி சிறப்புக் கற்கைநெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் வைபவம் அண்மையில் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டிருந்த கிண்ணியா gtz நிறுவனத்தைச் சேர்ந்த எச்.எம்.சமீம், கணினி பயிற்றுவிப்பு ஆசிரியர் ஜே.எம். இம்தியாஸ், கல்லூரி அதிபர் எஸ்.ஏ. சராப்தீன், உதவி அதிபர் எஸ்.ஏ.ஹஸன் ஆகியோருடன் சான்றிதழ்கள் பெற்ற மாணவர்களையும் படத்தில் காணலாம்.

தகவல் : ந.மு.றுஸ்மில்,
படம் : ந.மு.றிபாஸ்

# பொப்சிக்ல் (Popsicle)



1905 ஆம் ஆண்டில் கலிபோர்னியாவின் சென் ஃபிரென்சிஸ்கோவைச் சேர்ந்த 11 வயது சிறுவனான ஃப்ரேங்க் எப்பர்ஸன் என்பவனால்தான் 'பொப்சிக்ல்' கண்டுபிடிக்கப்பட்டது. ஒருநாள் இரவு எப்பர்ஸன், தான் அருந்திக் கொண்டிருந்த பழச்சாற்றில் எஞ்சியதை கலக்கியுடன் குளிர் சாதனப் பெட்டியில் வைத்துவிட்டான். அது அதி குளிரடைந்து ஒரு புது வித உணவாக மாறியது. இதனை முதலில் 'எப்சிக்ல்' என்ற பெயரினால் அழைத்தனர். பல வருடங்கள் கழித்து, அதாவது 1923 இல் எப்பர்ஸனின் குளிர்ந்த குச்சியில் கட்டியாகிய பழச்சாற்றுக்கு உத்தியோகபூர்வ உரிமை வழங்கப்பட்டது. 'எப்சிக்ல்' பின்னர் 'பொப்சிக்ல்' எனப் பெயர் மாற்றம் பெற்றது.

நாளடைவில் 'பொப்சிக்ல்' தயாரிப்பதைத் தொழிலாகக் கொண்ட எப்பர்ஸன், இரண்டு குச்சிகளுடனான இருவர் சாப்பிடக்கூடிய வகையிலான பொப்சிக்ல், ஃபட்ஜ்சிக்ல், க்ரீம்சிக்ல், ட்ரீம்சிக்ல் என பல பெயர்களில் பல சுவைகளில் இந்த பொப்சிக்லலை அறிமுகப்படுத்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන්
# ஆயுபோவன்
# வணக்கம்

புடைவைக் கடையில் கமலுக்கும் வியாபாரிக்கும் இடையில் நடைபெறும் ஓர் உரையாடல் மூலம் சிங்கள வாக்கிய அமைப்புக்கள் சிலவற்றை இங்கே தருகின்றோம்.

கலாபூஷணம் கே.என்.டி.பீரிஸ்



මුදලාලි: එන්න මහත්තයා එන්න.
முதலாளி: என்ன மஹத்தயா என்ன.
முதலாளி: வாங்க ஐயா வாங்க.
මොනව ද ඕනේ ?
மொனவத ஒனே?
என்ன வேண்டும்?

කමල්: මට ටී ෂර්ට් එකක් ගන්න ඕනේ.
கமல்: மட டீ சேட் எகக் கன்ன ஒனே.
கமல்: எனக்கு டீ சேட் ஒன்று வாங்க வேண்டும்.

මුදලාලි: එන්න මහත්තයා ටී ෂර්ට් මේ පැත්තේ.
முதலாளி: என்ன மஹத்தயா டீ சேட் மே பெத்தே.
முதலாளி: வாங்க ஐயா டீ சேட் இந்தப் பக்கம் இருக்கின்றது.
මහත්තයාට මොන පාටින් ද ඕනේ ?
மஹத்தயாட மொன பாடின்த ஒனே?
ஐயாவுக்கு என்ன நிறத்தில் வேண்டும்.

කමල්: මට නිල් පාටින් එකක් ඕනේ.
கமல்: மட நில் பாடின் எகக் ஒனே.
கமல்: எனக்கு நீல நிறத்தில் ஒன்று வேண்டும்.

මුදලාලි: කොලර් තියෙන එකක් ද ?
முதலாளி: கொளர் தியென எகக்த?
முதலாளி: கொளர் உள்ளதா வேண்டும்?

කමල්: ඔව්.
கமல்: ஒவ்.
கமல்: ஆம்.



මුදලාලි: මේක හොඳද මහත්තයා ?
முதலாளி: மேக ஹொந்தத மஹத்தயா?
முதலாளி: இது நல்லதா ஐயா?

කමල්: මේක පාට තදයි.
கமல்: மேக பாட ததய்.
கமல்: இது கடும் நிறம்.
ලා නිල් පාට එකක් දෙන්න.
லா நில் பாட எகக் தென்ன.
இளம் நீல நிறத்தில் ஒன்று தாருங்கள்.

මුදලාලි: එහෙනම් මේක හොඳයි මහත්තයා.
முதலாளி: எஹெனம் மேக ஹொந்தய் மஹத்தயா.
முதலாளி: அப்போ இது நல்லது ஐயா.



කමල්: මේකේ ගාණ කීය ද ?
கமல்: மேகே காண கீயத?
கமல்: இதன் விலை என்ன?

මුදලාලි: රුපියල් හත්සිය පනහයි.
முதலாளி: ருபியல் ஹத்ஸிய பணஹய்.
முதலாளி: [illegible]

කමල්: ගාණ වැඩියි. ටිකක් අඩුකරන්න.
கமல்: காண வெடிய். டிகக் அடுகறன்ன.
கமல்: விலை அதிகம். கொஞ்சம் குறையுங்கள்.

මුදලාලි: රුපියල් හත්සියක් දෙන්න මහත්තයා.
முதலாளி: ருபியல் ஹத்ஸியக் தென்ன மஹத்தயா.
முதலாளி: [illegible]

කමල්: ආ, මෙන්න සල්ලි.
கமல்: ஆ, மென்ன சல்லி.
கமல்: [illegible]

## අභ්‍යාසය பயிற்சி

வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழி பெயர்க்க.

உதா: என்ன வேண்டும்?
මොනව ද ඕනේ ?

i. ஒரு டீ சேட் வேண்டும்.
ii. இது நல்லதா?
iii. உங்களுக்கு என்ன நிறம் வேண்டும்?




## 'Can' எனும் 'எதிரிடை' துணைவினைச்சொல் (Modal Auxiliary Verb) வாக்கியங்களில் கையாளப்படும் முறை

✱ **Can** எனும் 'எதிரிடை' துணைவினைச் சொல் **(Modal Auxiliary Verb)** மூல வினைச்சொல்லுடன் **(Stem Verb)** கையாளப்பட்டு அமைக்கப்பட்ட 'உடன்பாடு' வாக்கியங்களை மேலும் இங்கே பயில்வோம்.

(அ) I can draw - என்னால் வரைய முடியும்.
(ஆ) You can pay - உன்னால் செலுத்த முடியும்.
(இ) We can sit - எங்களால் உட்கார முடியும்.
(ஈ) They can swim - அவர்களால் நீந்த முடியும்.

✱ மேற்படி வாக்கியங்களில் செயற்படுபொருள் **(Object)** சேர்க்கப்படுகின்ற போது அவை பின்வருமாறு அமைகின்றன.

(அ) I can draw a picture.
என்னால் படம் ஒன்றை வரைய முடியும்.
(ஆ) You can pay that money.
உன்னால் அந்தப் பணத்தை செலுத்த முடியும்.
(இ) We can sit on the floor.
எங்களால் நிலத்தில் உட்கார முடியும்.
(ஈ) They can swim in the river.
அவர்களால் ஆற்றில் நீந்த முடியும்.

**குறிப்பு:** The river - ஆறு/in the river - ஆற்றில்

**He, She, It** முதலான பிரதிப் பெயர்ச்சொற்கள் **(Pronoun)** சகிதம் **'can'** கையாளப்பட்டு அமைக்கப்பட்ட வாக்கியங்கள் இவை.

(அ) He can buy - அவனால் வாங்க முடியும்.
(ஆ) She can bring - அவளால் கொண்டுவர முடியும்.
(இ) It can jump - அதனால் பாய முடியும்.

✱ மேற்படி வாக்கியங்கள் செயற்படுபொருள் **(Object)** சகிதம் பின்வருமாறு அமைகின்றன.

(அ) He can buy a pen.
அவனால் பேனை ஒன்றை வாங்கமுடியும்.
(ஆ) She can bring a bag.
அவளால் பை ஒன்றை கொண்டுவர முடியும்.
(இ) It can jump over the fence.
அதனால் வேலியின் மேலாகப் பாய முடியும்.

✱ மேற்படி வாக்கியங்களில் காணப்படுகின்ற பிரதிப்பெயர்ச் சொற்களுக்கு **(Pronouns)** பதிலாக, பெயர்ச் சொற்களை **(Nouns)** எழுவாய்ப் பகுதியில் கையாண்டு அமைக்கப்பட்ட வேறு சில வாக்கியங்கள் இவை.

(அ) Nimal can make a kite.
நிமாலால் பட்டம் ஒன்றை செய்ய முடியும்.
(ஆ) Mary can cook rice.
மேரியால் சோறு சமைக்க முடியும்.
(இ) A bird can fly in the sky.
பறவையால் வானத்தில் பறக்க முடியும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உயிரினங்கள் அழிவடைவது பெருகி வருவதாக ஐ.நா செயலாளர் தெரிவிப்பு






உலக அளவில் சுற்றுச் சூழல் மாசடைதல் குறித்தான மாநாடொன்று அண்மையில் ஜேர்மன் நாட்டில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் 193 நாடுகள் பங்குபற்றியிருந்தன. இதன்போது ஐ.நா செயலாளர் நாயகம் பான் கி மூன் முன் வைத்த விசேட அறிக்கை உலக நாடுகளின் கவனத்தை ஈர்ப்பதாக அமைந்தது. அதாவது, உலகில் உயிரினங்களின் அழிவானது முன்னைய காலங்களை விட அதிகரித்து வருவதாகவும், இதன் படி ஒரு மணித்தியாலத்திற்கு மூன்று உயிரினங்கள் அழிவடைந்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இதில் உராங் உட்டான், யானை, சிம்பன்சி மற்றும் பறவைகள் உள்ளிட்ட நீர்வாழ் உயிரினங்களில் மூன்றில் ஒரு பகுதியும் வேகமாக அழிவடைந்து வருவதாகவும் அவ்வாறே தாவர வகைகளின் ஆயுள் காலமும் கணிசமான அளவில் வீழ்ச்சி கண்டிருப்பதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறிப்பாக இந்நிலை ஏற்படுகின்றமைக்கு மனிதர்களே காரணகர்த்தாக்களாக இருப்பதாகவும் சூழல் மாசடைதல், புவி வெப்ப அதிகரிப்பு போன்ற விடயங்களில் மனிதர்களே குற்றவாளிகளாக இருப்பதாகவும் ஐ.நா செயலாளர் தெரிவித்துள்ளார். இவ்வாறான அழிவு நிலையானது கடைசியில் மனிதனுக்கு பட்டினிச்சாவை ஏற்படுத்தி மனித அழிவிலேயே முடிவடையும் என்றும் அவர் அழுத்தமாக தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# தாரிக் அஸீஸுக்கு என்ன தண்டனை?



ஈராக் நாட்டின் முன்னாள் ஜனாதிபதியும் தூக்கிலிட்டு கொல்லப்பட்டவருமான சதாம் ஹுசேனின் வலது கரமாக செயற்பட்டவர்தான் தாரிக் அஸீஸ். இவர் அமெரிக்க இராணுவத்திடம் சரணடைந்து தற்போது நீதிமன்ற விசாரணைகளை எதிர்நோக்கியுள்ளார். சதாம் ஹுசேனைப் போலவே இவருக்கும் மரண தண்டனை விதிக்கப்படுமா என்பதே அநேகரது வினாவாக இருக்கின்றது.

சதாம் ஹுசேனுக்கு இருந்த அதே அளவு அதிகாரத்தை இவரும் கொண்டிருந்ததுடன், சதாம் ஹுசேனின் அமைச்சரவையிலிருந்த ஒரே ஒரு கத்தோலிக்க மதத்தவர் இவர் என்றும் கூறப்படுகின்றது.

அமைச்சரவையிலிருந்த அனைவரும் கொல்லப்பட்டுள்ள நிலையில் தாரிக் அஸீஸ் மட்டுமே இன்னும் உயிருடன் உள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

71 வயதாகின்ற தாரிக் அஸீஸ் சம்பந்தப்பட்ட வழக்கு விசாரணைகள் சதாம் ஹுசேனுக்கு மரண தண்டனை விதித்த நீதிபதியின் முன்னிலையிலேயே நடைபெறுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

2003 ஆம் ஆண்டில் அமெரிக்க இராணுவத்தினரிடம் சரணடைந்த தாரிக் அஸீஸுக்கு எத்தகைய தண்டனை வழங்கப்படும் என்பதையிட்டு உலகவாழ் மக்கள் எதிர்பார்ப்புடன் இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

# மிகச் சிறிய ஹெலிகொப்டர்



உலகிலேயே மிகவும் சிறிய ஹொலிகொப்டரை தயாரித்துள்ளார் ஜப்பானைசேர்ந்த 71 வயதுடைய 'கெனாய் யனகிஸாவா' என்பவர். இவர் தயாரித்துள்ள இந்த சிறிய ஹெலிகொப்டரின் மூலம் தனது கன்னிப்பயணத்தை ஜப்பானிலிருந்து ஆரம்பித்த இவர் இத்தாலி நோக்கிச் சென்று 'வின்ஸி' என்ற பிரதேசத்தில் தரையிறங்கினார். உலகப் புகழ் பெற்ற ஓவியர் லியானாடோ டாவின்ஸியின் பிறப்பிடமான இப்பிரதேசத்தில் தனது புதிய தயாரிப்பான இச்சிறிய ஹெலிகொப்டரை தரையிறக்குவது சரித்திர முக்கியத்துவம் மிக்கது என்று 'கெனாய்' தெரிவித்துள்ளார். இவரது தயாரிப்பான இந்த சிறிய ஹெலிகொப்டரின் நிறை 165 இறாத்தலாகும்.

# லெபனானில் புதிய ஜனாதிபதி தெரிவு



லெபனானில் புதிய ஜனாதிபதியாக ஜெனரல் மைக்கல் சுலைமான் என்பவர் தெரிவாகியுள்ளார். அரசியல் நெருக்கடியிலிருந்த லெபனானில் மேற்படி ஜனாதிபதி தெரிவானது கொந்தளிப்பினை தவிர்த்துள்ளதாக கருதப்படுகின்றது.

லெபனான் நாடாளுமன்றில் மொத்தமுள்ள 127 உறுப்பினர்களில் 118 உறுப்பினர்களின் அமோக ஆதரவைப் பெற்றே ஜெனரல் மைக்கல் சுலைமான் ஜனாதிபதியாக தெரிவாகியுள்ளார். இவரது தெரிவையடுத்து தலைநகர் பெய்ரூட்டில் மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

கடந்த நொவம்பர் மாதம் தொடக்கம் லெபனானில் உரிய ஜனாதிபதியொருவர் இல்லாதிருந்தமை ஜனநாயகத்திற்கு பெரும் அச்சுறுத்தலாகவே இருந்து வந்ததாக செய்திகள் தெரிவித்திருந்தன.

புதிதாக ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டிருக்கும் ஜெனரல் மைக்கல் சுலைமான் சிரியாவுடனான நட்புறவை பேணவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். அதுமட்டுமன்றி ஆட்சி நிர்வாக முறைகளிலும் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தி நாட்டை சுபீட்சமான காலத்தை நோக்கி நகர்த்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## அற்லஸ் கேள்வி - 154

**கேள்வி:** உலகிலேயே மிகச் சிறிய ஹெலிகொப்டரின் நிறை எவ்வளவு?

சரியான விடை........................................

**உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**அற்லஸ் வழியே**
**உலகைக் காண்போம், கேள்வி - 154,**
**விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.**

**போட்டி இல - 152 இன் சரியான விடை: 7.8 ரிச்டர்**

**பரிசு பெறுவோர்**

எஃப்.பர்வின்,
159, தம்புள்ள வீதி, தோறயாய, குருணாகல்.

ஐ.இளையரசி,
மே/பா ஐயாத்துரை,
4, ரொசிட்டா எஸ்டேட், கொட்டகலை.

ம.மரியஜெனார்த்தன்,
27, வள்ளுவர் வீதி, செல்வநாயகபுரம்,
திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளி மண்டலத்தின் தகவல்கள்



நாம் பூமியில் உயிர் வாழ்வதற்கு வளி அத்தியாவசியமானதாகும். வளியை சுவாசிக்காமல் ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு மேல் நாம் உயிர் வாழமுடியாது. பூமியின் மேற்பரப்பில் ஒரு குறிப்பிட்ட உயரம் வரை வளி எங்கும் பரவியுள்ளது. இவ்வாறு பரவியுள்ளதை 'வளிமண்டலம்' என அழைக்கின்றோம். வளிமண்டலம் மாத்திரம் இல்லாவிட்டால் பூமியில் உள்ள எந்தவொரு உயிரினமும் உருவாகி இருக்க வாய்ப்பில்லை. மரஞ்செடி கொடிகளாக இருக்கலாம், மிருகங்கள், பறவைகளாக இருக்கலாம், மனிதனாக இருக்கலாம் அனைத்து உயிரினங்களும் உலகில் வாழ வளிமண்டலம் அத்தியாவசியமாகும். பொதுவாகவே அனைத்து உயிரினங்களும் சுவாசிப்பதற்கு தேவையான ஒட்சிசன் வாயுவை வளிமண்டலத்தில் இருந்தே பெற வேண்டும்.

வளிமண்டலமானது புவியைச் சுற்றி ஒரு போர்வை போல் மூடியுள்ளது. அது சூரியனின் தீங்கு விளைவிக்கக் கூடிய 'கிரணம்' எனப்படும் கதிர் வீச்சில் இருந்து உயிரினங்களையும் தாவரங்களையும் பாதுகாக்கின்றது. பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய கதிர்களை பிரதிபலிக்கச் செய்து தகுந்த பொருத்தமான சூரியக் கதிர்களை மட்டும் புவிக்கு அனுப்புகின்றது. புவிக்கு மட்டுமல்ல ஏனைய கிரகங்களுக்கும் வாயு மண்டலம் உண்டு. எனினும், ஏனைய வளிமண்டலங்கள் புவியின் வளிமண்டலத்தை விட அதிகம் மாறுபட்டவை.

வெள்ளிக் கிரகத்தின் வளிமண்டலத்தின் கனமானது புவியின் வளிமண்டல கனத்தை விட மிக அதிகமானது. வளிமண்டலத்தின் அணுக்களின் தொகையை விட அதிகமான தொகையைக் கொண்டு காணப்படுவதே இதற்குரிய காரணமாகும். அதனால், வெள்ளிக் கிரகத்தின் வளிமண்டல அமுக்கமானது புவியின் வளிமண்டல அழுத்தத்தை விட நூறு மடங்காகும். செவ்வாய்க்கிரகத்திற்கோ மிக நுண்ணிய வளிமண்டலமே உண்டு. வளிமண்டலமானது வெள்ளி மற்றும் செவ்வாய் கிரக வளிமண்டலத்திற்கு இடையே உள்ள உண்மைத் தோற்றத்தைக் காட்டுகின்றது.


புவியின் வளிமண்டலத்தை 5 பிரதான பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

## வளி மண்டலம்

வளி மண்டலம் புவியின் மேற்பரப்பில் இருந்து 690 கிலோ மீற்றர் உயரத்திற்கு அப்பால் அமைந்துள்ளது. இங்கு மிகவும் மென்மையான நுண்ணிய வாயுப் படலம் அமைந்துள்ளது. வாயு அணு சூரியக் கதிர்கள் காரணமாக இங்கு நிரந்தர 'அயனம்' காணப்படுகின்றது.

## அயன மண்டலம்

இங்கு காணப்படும் சிறிய வாயு அணுக்கள் மூலம் சூரியக் கதிர்கள் உறிஞ்சப்படுகின்றன அல்லது உட்கிரகிக்கப்படுகின்றன. இங்கு காணப்படும் வளிப்படலத்தின் வெப்பமோ 2000 பாகை செல்சியஸ் ஆகும்.




## குளிர் மண்டலம்

புவியின் மேற்பரப்பில் நிலமட்டத்தில் இருந்து 80 கிலோமீற்றர் உயரத்தில் இப்பகுதி அமைந்துள்ளது. இங்கு வெப்பத்தின் அளவு அதன் மேற்பகுதியில் இருந்ததை விட மிகக் குறைவாகக் காணப்படும். அதாவது இவ்வாயுப் படலத்தில் 12° பாகை செல்சியஸ் வெப்பம் மாத்திரமே காணப்படும்.

## நிரந்தர மண்டலம்

இது தரைமட்டத்தில் இருந்து 20 கிலோ மீற்றர் உயரத்திற்கு அப்பால் பரவிக் காணப்படும் பிரதேசமாகும். இப்பிரதேசமானது 50 கிலோ மீற்றர் உயரம் வரை பரவிச் செல்கின்றது. இந்த மண்டலத்தின் அதிகூடிய வெப்பமானது 60 பாகை செல்சியஸ் ஆகும். இம் மண்டலத்தின் கீழ்பகுதி அதாவது உயரம் குறைந்த பகுதியை நோக்கி செல்லச் செல்ல படிப்படியாக வெப்பம் குறைந்து செல்லும். 'ஓசோன்' படலம் இம்மண்டலத்திலேயே அமைந்துள்ளது.



## மாறும் மண்டலம்

காலநிலை மாற்றங்களுக்குக் காரணமான இம்மண்டலம் வளிமண்டலத்தின் மிகவும் தாழ்வான அடிப்பகுதியில் அமைந்துள்ளது. இம்மாறும் மண்டலம் தரைமட்டத்தில் இருந்து 20 கிலோமீற்றர் வரையிலான பகுதி வரை காணப்படுகின்றது. துருவப் பிரதேசங்களில் இது 10 கிலோமீற்றர் உயரம் வரையே பரந்து காணப்படுகின்றது. பூமியைச் சுற்றி போர்வைபோல் இந்தப் படலம் வளிமண்டலத்தின் வாயுக்களில் 75% மானது இவ்வளி மண்டலத்திலேயே காணப்படுகின்றது.



## வளிமண்டலம் மாசடைதல்

வாகனங்கள், கைத்தொழிற்சாலைகள், எரிபொருள் மற்றும் ஏனைய தொழிற்துறைகளின் மூலம் பல்வேறு நச்சு வாயுக்கள் மற்றும் சிறிய தூசு துணுக்குகள் வளிமண்டலத்தால் உறிஞ்சப்படுகின்றன. சல்பர் டயொக்சைட், நைதரசன் டயொக்சைட், ஈயம் என்பன போன்ற கழிவுப்பொருட்களால் வளிமண்டலம் மாசடைகின்றது. இன்று உலகின் நகர்ப்புறங்களில் வளிமண்டலம் மாசடைதலானது உச்சநிலையை அடைந்துள்ளது. இப்பிரதேசத்தில் வாழும் மனிதன் உள்ளிட்ட அனைத்து உயிரினங்களுக்கும் இப்பிரதேசமானது வாழத்தகுதியற்றதாக மாறிவருகின்றது. இவ் வளிமண்டலம் மாசடைவதால் உயிர்ப் பல்வகைமைக்கு பாதிப்பு ஏற்படுகின்றது. இதனால் ஏற்படும் சூழல் மாற்றங்களால் மென்மையான நுண்ணிய உயிரினங்கள் பல அழிந்துவிடுகின்றன அல்லது அழியும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளன. பல்வேறு நோய்கள் உருவாக காரணமாய் அமைகின்றன. 'அமில மழை' போன்ற வளிமண்டலம் மாசடையும் நிகழ்வானது பெருந்தீங்கு விளைவிக்கும் ஒரு பெறுபேறாகக் கருதலாம்.

## ஜேம்ஸ் கிளெய்சர்

ஆங்கிலேயரான ஜேம்ஸ் கிளெய்சர் வளிமண்டலம் குறித்து மிகுந்த அக்கறையும் ஆர்வமும் கொண்டவர். இவர் ஹென்றி கொக்ஸ்வேல் என்பவருடன் இணைந்து பலூனில் ஏறி மாறும் மண்டலம் காணப்படும் வானில் பறந்து சென்று ஆய்வுகளை நடத்தினார். உயரே செல்லச் செல்ல வளிமண்டலத்தின் வெப்பநிலை குறைவடைவதைக் கண்டுபிடித்தார். வளிமண்டலத்தின் மேல் பகுதிக்கு ஒருமுறை சென்ற போது உயிராபத்தை எதிர்நோக்கினார். ஒட்சிசன் வாயு அடங்கிய உபகரணத்தையோ பாதுகாப்பு உடைகளையோ அவர் கொண்டு போகாததே அதற்கு காரணமாகும். காலநிலை விபரங்கள் குறித்து ஐரோப்பிய நாடுகளின் பத்திரிகைகளுக்கு முதன்முதலாக அறிக்கை சமர்ப்பித்தவர் இவரே.

ப.இரஞ்சித் ஜெயகர்

## விஜய் சந்தா விபரம்

'விஜய் பத்திரிகைக்கு சந்தா செலுத்தி தபால் மூலமும், நேரடியாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

| | 1 வருடம் | 6 மாதம் |
|---|---|---|
| நேரடி விநியோகம் (கொழும்பிற்குள்) | ரூ.624/= | ரூ.312/= |
| தபால் மூலம் | ரூ.1404/= | ரூ.702/= |

பின்வரும் கூப்பனை பூர்த்தி செய்து அனுப்புங்கள்
*(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)*

பெயர்: ..................................................
முகவரி: ..................................................
தொ.பே.இல: ..................................................
எமக்கு .............. மாதம்/வருடத்திற்கான இதழ்களை அனுப்பி வைக்கவும்.

.......................... ..........................
கையொப்பம் திகதி

உங்கள் சந்தாத் தொகையினைக் காசுக் கட்டளையாகவோ (Money Order), காசோலையாகவோ (Cheque) அனுப்பலாம். காசுக்கட்டளையை மாற்றும் தபால் கந்தோர் SLAVE ISLAND POST OFFICE எனக் குறிப்பிடவும். காசோலை (Cheque) அனுப்புவோர் Wijeya News Papers Ltd என்ற பெயருக்கு எழுதவும்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**CIRCULATION MANAGER,
Wijeya Newspapers Ltd.,
8, Hunupitiya Cross Road, Colombo-02**

மேலதிக விபரங்களுக்கு தொ.பே.இல - 0112479653

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாய்மரப் படகு 20



'கலை அமுதன்' இக்பால்

## கரை தட்டியது கப்பல்



ஆறு மாதகாலம் திக்குத் தெரியாத சாகரத்தில் வழிதவறி அல்லாடிய பாய் மரக்கப்பல் இப்போது ஒருவாறு வங்காள விரிகுடாவிற்குள் பிரவேசித்தது.

ஒரேயொரு பாய்மரம் மட்டுமல்லாது, படகின் 'சுக்கான்' விசிறிகளிலொன்று புயல் அனர்த்தத்தில் முறிந்து போனதால், கப்பல் நீரைக் கிழித்துக் கொண்டு செல்ல முடியாதிருந்தது.

படகுக் கப்பலின் சகல இயக்கங்களும் முடங்கிப் போனதால் கப்பல் ஆமை வேகத்தில் நகர்ந்து கொண்டிருந்தது. கப்பலின் அடித்தளத்தில் ஏற்கனவே வெடிப்பு ஏற்பட்டு, ஒட்டுப் போட்ட இடம் மீண்டும் கீறல் விழுந்ததாலும் வங்கக்கடலிலே பாரிய மீன்கள் தமது தலைகளாலும், வால்பகுதிகளாலும் முட்டி மோதியதால் ஒட்டுப் போட்ட ஓட்டை, பிரிந்து அதன் மூலமாக கடல்நீர் சில்லிட்டு உள்ளே நுழைந்தது.

நாலைந்து கைதிகள் கப்பலினுள்ளே புகும் கடல்நீரை அள்ளி இறைத்தபடியே இருந்தனர். கப்பல் அடித்தளம் நீர் நிரம்பினால் கப்பல் நகரமுடியாது. நீர் பெருகினால், அடிப்பாரம் மிகைத்துக் கப்பல் கடலிலே மூழ்கிவிடும் அபாயமிருந்தது. நிலைமை, கட்டுக்கடங்காமல் போகவே, கப்பலின் தற்காலிக மாலுமி அருகிலுள்ள நாடுகளிடம் உதவி கேட்டுத் தொடர்பு கொண்டபடியிருந்தார். எனினும், எந்த நாட்டிலிருந்தும் சரியான பதில் கிடைக்கவில்லை.

குறிப்பிட்ட கப்பல் கம்பனியுடன் தொடர்பு கொண்டபோது, அவர்களின் முயற்சியாலே மனிதாபிமான அடிப்படையில் பிரித்தானிய கடற்படைக்குச் சொந்தமான இரண்டு பாரிய 'சீப்பிளேன்'கள் வங்காள விரிகுடா நோக்கி வந்து, நீரின் மேலே வல்லூறுகள் வந்து குந்தியது போல, பாய்மரக் கப்பலருகே வந்து இறங்கின.

கடல் சிப்பந்திகள் மூட்டை முடிச்சுக்களுடன் புறப்பட ஆயத்தமாகினர். எல்லோரும் கடல் விமானத்தில் ஏறிய பிறகு தான் கடைசியாக ஏறுவதாக அக்கப்பலின் தற்காலிக மாலுமியான அந்த இந்தியக் கடல் விஞ்ஞானி கூறியபோது யுத்தக் கைதிகள் எவரும் கடல் விமானத்தில் ஏற மறுத்துவிட்டனர். ஏறியவர்களும் இறங்கிவிட்டனர்.

ஆறு மாதகால கடல் பயண நட்பினாலே பின்னிப் பிணைந்திருந்த கப்பல் சிப்பந்திகளும் அந்த இரு மருத்துவத் தாதிப் பெண்களும் கப்பல் பயணிகளை விட்டுப் பிரிய மனமில்லாமல் உங்களுடனேயே நாங்களும் இருந்துவிடுகின்றோம் என்று கூறி படகுக் கப்பலில் தங்கிவிட்டனர்.

நிலைமை மேலும் மோசமடைந்தது. கப்பலிலுள்ளவர்கள் கடலிலே மூழ்கிவிடும் அபாயமிருந்ததால் படகின் தற்காலிக மாலுமி இந்தியக் கடற்படை உயிர்காக்கும் பிரிவுடன் அவசரத் தொடர்பு கொண்டார். ஒரே நாளில் இழுவைக் கப்பலொன்று வந்து சேர்ந்தது. ''யாரும் படகை விட்டு இறங்க வேண்டியதில்லை. நமது படகை இந்த இழுவைக் கப்பல் இழுத்துச் செல்லும்'' என்று மாலுமி அறிவித்தான்.

படகை இழுவைக் கப்பல் இழுத்துச் சென்றது. இரண்டு நாள் முடிவில் தலைமன்னார் வெளிச்சக்கூட்டின் வெளிச்சம் கப்பல் பயணிகள் கண்களுக்குத் தென்படவே மகிழ்ச்சிப் பிரவாகத்திலே அனைவரும் கூச்சலிட்டனர். படகு தலைமன்னார் இறங்கு துறையிலே தரை தட்டியது.

(அடுத்த இதழில் முடிவுறும்)

# எதற்கும் ஒரு காலம் உண்டு


(சென்ற இதழ் தொடர்ச்சி)

சிறுவனான ரவி பயந்து தனக்குச் சிலை வடிக்கத் தெரியும் என்று கூறினான். ரங்கசாமி மிகுந்த சந்தோஷமடைந்தான். ''ம்..... உனக்கு சிலை வடிக்கத் தேவையான பொருளெல்லாம் கொண்டு வந்து தருகிறேன். மரியாதையாக நீ தினம் எனக்கு அழகிய சிலைகளைச் செய்து தர வேண்டும். நான் தினமும் வந்த பெற்றுக் கொள்கிறேன்'' என்று கூறி கதவையும் சாத்திவிட்டுச் சென்றான். பின்னர் தினமும் மாலையில் வந்து ரவி வடித்து வைக்கும் சிலைகளை எடுத்துச் சென்று அடுத்த ஊரில் விற்று நிறையப் பணம் சம்பாதித்து வந்தான்.

ஒருநாள் ரவிக்குத் தெரியாமல் அவன் சிலை செய்வதை மறைந்திருந்து பார்த்தான்.

மகன் ரவி சில நாட்களாக வீடு வராததை எண்ணி மிகவும் வருந்திய வர்மா யாரோ தனது மகனைக் கடத்திச் சென்றிருக்க வேண்டும் என்று முடிவு செய்து ரவியை தேடித் திரிந்தார்.

ஒருநாள் ரங்கசாமி அடுத்த ஊரில் அழகான சிலையை விற்று விட்டு செல்வதைக் கண்டார் வர்மா. கடைக்காரனிடம் சென்று ரங்கசாமி விற்ற சிலையை வாங்கிப் பார்த்தார். அவருக்கு எல்லாமே விளங்கி விட்டது. ரவியை ரங்கசாமிதான்



கடத்தியிருக்க வேண்டுமென தெரிந்து கொண்டார்.

மறுநாள் மாலை ரவியிடமிருந்து சிலைகளை எடுக்கச் சென்ற ரங்கசாமி அங்கே ரவி சிலைகள் எதுவும் செய்து வைக்காமல் இருப்பதைக் கண்டு ஆத்திரம் கொண்டான். ஆனால், ரவியோ தன்னால் இன்று சிலைகளைச் செய்ய முடியவில்லை என்றான். இந்த நிலை தான் நேற்றுப் பார்த்ததால் தான் வந்தது என்று ரங்கசாமி புரிந்து கொண்டு மிகவும் வருந்தினான். இனியும் ரவியை உயிருடன் விட்டு வைப்பதால் தனக்குப் பிரயோசனம் எதுவுமில்லை. அத்துடன் ஆபத்துத்தான் என்று நினைத்து ரவியைக் கொல்ல எண்ணி தன் இடையிலிருந்த கத்தியை மெதுவாக உருவி ரவியைக் குத்த ஓங்கினான். ஆனால், மறுநிமிடமே வர்மா கூட்டி வந்த ஊர்காவலர்கள் அனைவரும் உள்ளே நுழைந்து ரங்கசாமியை கையும், மெய்யுமாகப் பிடித்துக் கொண்டனர்.

ரவி மூலம் நடந்தவற்றை எல்லாம் அறிந்த வர்மா ''இதைத்தான் நான் அன்றே சொன்னேன். இப்பொழுது பார்த்தாயா இந்த தெய்வீகக் கலை ஒருவருக்கும் பயன்படாமல் போய்விட்டது. இவ்வளவும் நீ என் அனுமதியில்லாமல் இந்தச் சின்ன வயதிலேயே ஒரு ரகசியத்தை மனதிலே வைத்திருக்கும் பக்குவம் வரும் முன்னரே இந்தக் கலையைக் கற்றதன் விளைவுதான். அதற்காகத்தான் சொல்வார்கள்... ''எதற்கும் ஒரு காலம் உண்டு'' என்று பெருமூச்சுடன் கூறினார் வர்மா. (முற்றும்)

**பாத்திமா ரிஸ்னா,**
**ப/அல்-அஸ்ஹர் மு.வித்.,**
**அலுகொல்லை.**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச டென்னிஸ் களத்தில் முன்னிலை வகிக்கும் வீராங்கனைகள்



மரியா ஷெரபோவா

டென்னிஸ் விளையாட்டானது உலக நாடுகளின் பலரது அபிமானத்தை வென்ற ஒரு விளையாட்டாகும். டென்னிஸ் விளையாட்டில் ஈடுபடுவதில் ஆடவர்,மகளிர் என இரண்டு பிரிவினருமே உலகப் புகழ் பெற்றுள்ளனர். இதில் மகளிர் பிரிவை சேர்ந்தவர்கள் குறிப்பிடக்கூடியவர்கள். இதன்படி சர்வதேச டென்னிஸ் அரங்கில் முன்னிலை வகிக்கும் வீராங்கனைகள் சிலர் பற்றிய விபரங்களை இங்கே பார்க்கலாம்.

## மரியா ஷெரபோவா

மகளிர் பிரிவில் உலக அளவில் முதல் இடத்தைப் பெற்றிருக்கும் வீராங்கனை என்று இவரைக் கருதமுடியும். ரஷ்யாவைச் சேர்ந்த இவர் 19 தடவைகள் வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்து செம்பியனாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.




## ஸ்வெட்லானா குஸ்நெட்ஸோவா

ரஷ்யாவைச் சேர்ந்த மற்றுமொரு வீராங்கனையான ஸ்வெட்லானா குஸ்நெட்ஸோவா இரண்டாம் இடத்தைப் பெறுகின்ற வீராங்கனையாவர். 22 வயதையுடைய இவர் 9 தடவைகள் உலக டென்னிஸ் செம்பியனாக தெரிவாகியுள்ளார். 'மீன் கிராண்ட் ஸ்லாம்' என்ற செம்பியன் பட்டத்தையும் வெற்றியீட்டியுள்ள இவர் 2004 ஆம் ஆண்டில் நடைபெற்ற 'அமெரிக்க பகிரங்க கிராண்ட் ஸ்லாம்' மகளிர் போட்டியின் போதே மேற்படி பட்டத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு 2006 ஆம் ஆண்டு நடைபெற்ற 'பிரான்ஸ் பகிரங்க' மகளிர் டென்னிஸ் போட்டியில் இரண்டாம் இடத்தை இவர் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.




## எனா சாக்வெடாட்சே

அடுத்து மூன்றாம் இடத்தை வகிப்பவர்'எனா சாக்வெடாட்சே' என்பவராவார். இவர் 2003ஆம் ஆண்டிலிருந்து தொழில்சார் போட்டியாளராக கலந்து கொண்டு வருகின்றார். 22 வயதையுடைய இவரும் ஒரு ரஷ்ய வீராங்கனையாவார். எனினும்,இவர் இன்னமும் 'கிராண்ட் ஸ்லாம்' வெற்றியை ஈட்டவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. எனினும், இவர் 7 முறை செம்பியனாக தெரிவாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.




## எலீனா டிமென்டியேவா

இவரும் ரஷ்யாவைச் சேர்ந்த சிறந்த வீராங்கனையாவார். 27 வயதுடைய இவர் உலக டென்னிஸ் களத்திலுள்ள வயதில் கூடிய வீராங்கனைகளுள் ஒருவராவார். 1998 ஆம் ஆண்டு தொடக்கம் சர்வதேச டென்னிஸ் களத்தில் நிலைத்திருக்கும் இவர் 2000 ஆம் ஆண்டில் 'சிட்னி' ஒலிம்பிக் போட்டிகளின் போது வெள்ளிப்பதக்கமொன்றையும் வெற்றியீட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஜெஸ்டின் ஹெனின்

பெல்ஜியத்தைச் சேர்ந்த ஜெஸ்டின் ஹெனின் டென்னிஸ் வீராங்கனைகளுள் மற்றுமொரு சிறந்த வீராங்கனையாவார். 2006 ஆம் ஆண்டு தொடக்கம் இதுகாலவரை இடைவிடாது சர்வதேச மகளிர் டென்னிஸ் தரப்பட்டியலில் முதலாமிடத்தில் இருக்கும் இவர், பல சாதனைகளுக்கு உரித்துடையவராவார். இதன்படி 7 'கிராண்ட் ஸ்லாம்' கிண்ணங்களை வெற்றியீட்டிய முதலாவது வீராங்கனை என்ற சாதனை இதில் குறிப்பிடத்தக்கதாகும்.

2005 ஆம் ஆண்டிலும் மீண்டும் தனது திறமையை வெளிப்படுத்தி 'பிரான்ஸ் பகிரங்க' டென்னிஸ் போட்டியில் இரண்டாவது தடவையாகவும் வெற்றியீட்டியிருந்தார். 2006 ஆம் ஆண்டு 'விம்பிள்டன் மற்றும் 'பிரான்ஸ் பகிரங்க டென்னிஸ்' மகளிர் கிண்ணங்களையும் 2007 ஆம் ஆண்டில் 'அமெரிக்கா பகிரங்க டென்னிஸ்' மற்றும் 'பிரான்ஸ் பகிரங்க டென்னிஸ்' போட்டிகளிலும் வெற்றியீட்டிய ஹெனின் சர்வதேச முதல் நிலை வீராங்கனை என்ற சாதனையை நிலைநாட்டியுள்ளார்.



வீனஸ் வில்லியம்ஸ்
செரினா வில்லியம்ஸ்




## எனா இவனொவிச்

சேர்பியாவைச் சேர்ந்த எனா இவனொவிச்தான் சர்வதேச டென்னிஸ் களத்தில் வயதில் குறைந்த வீராங்கனையாவார். இந்த வருடத்தின் ஆரம்ப கட்டங்களில் மகளிர் டென்னிஸ் போட்டிகள் பலவற்றில் இவர் செம்பியனாகியமை குறிப்பிடத்தக்கது.

## வில்லியம்ஸ் சகோதரிகள்

வீனஸ் வில்லியம்ஸ் : டென்னிஸ் களத்தில் அமெரிக்காவின் ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதற்கு களம் இறங்கியவர்கள்தான் வில்லியம்ஸ் சகோதரிகள். 1980 ஆம் ஆண்டு பிறந்த வீனஸ் வில்லியம்ஸ் இதுவரை 36 வெற்றிகளை ஈட்டியுள்ளார்.

செரினா வில்லியம்ஸ் : வில்லியம்ஸ் சகோதரிகளுள் மற்றொருவரான செரினா வில்லியம்ஸ் 30 தடவைகள் வெற்றிக் கிண்ணங்களை தனதாக்கிக் கொண்டுள்ளார்.



# ஈராக் கால்பந்தாட்ட அணிக்கு தடைவிதிப்பு

'பிஃபா' எனப்படும் சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனம் ஈராக்கின் கால்பந்தாட்ட அணிக்கு ஒருவருட கால தடையை விதித்துள்ளமையானது, அந்நாட்டின் ஒலிம்பிக் கிண்ண எதிர்பார்ப்பை வீணடித்திருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஈராக் அரசாங்கம் அந்நாட்டிலுள்ள ஒலிம்பிக் குழு மற்றும் தேசிய விளையாட்டு சம்மேளனங்களை கலைத்துள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதமாகவே 'பிஃபா' சம்மேளனம் இவ்வாறு ஈராக் கால்பந்தாட்ட அணிக்கு தடை விதித்திருப்பதாக கூறப்படுகின்றது.

மேற்படி தடையினால் ஒலிம்பிக் வாய்ப்பை மட்டுமன்றி உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகளுக்கான வாய்ப்பைக் கூட ஈராக் கால்பந்தாட்ட அணி இழக்கவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# ஆசிய கிண்ண கிரிக்கெட் ஜூன் 24 இல் ஆரம்பம்





இந்த மாதம் பாகிஸ்தானில் நடைபெறவுள்ள ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டிக்காக 2 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கு ஆசிய கிரிக்கெட் சபை இணக்கத்தைத் தெரிவித்துள்ளது. இதன்படி இப்போட்டிகளில் கலந்து கொள்கின்ற இலங்கை கிரிக்கெட் சபைக்கு இதிலிருந்து ரூபா 21 கோடிக்கும் மேல் வருமானம் கிடைக்கவுள்ளது. ஆசிய கிண்ணத்தை வெற்றி கொள்கின்ற அணிக்கு ரூ.2.14 கோடி வழங்கப்படும் எனவும் அதன்படி இலங்கை அணி செம்பியனாகினால் மொத்தமாக ரூபா 23 கோடிக்கும் மேல் வருமானம் கிடைக்கப் பெறும்.

ஜூன் மாதம் 24 ஆம் திகதி தொடக்கம் ஜூலை 5 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள ஆசிய கிண்ண போட்டிகளுக்கு முதல்நிலை வீரர்களை தெரிவு செய்யுமாறு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை இலங்கை, இந்தியா கிரிக்கெட் அதிகாரிகளிடம் கேட்டுக் கொண்டுள்ளது. ஐ.பி.எல் 'டுவென்டி டுவென்டி' போட்டிகளில் கலந்து கொண்ட சர்வதேச தரம் மிக்க முன்னணி வீரர்கள் தமது களைப்பை போக்குவதற்காக இடைக்கால ஓய்வினைப் பெற முயற்சிக்கக்கூடும். இவ்வாறு அவர்களுக்கு அனுமதி வழங்கினால் இரண்டாம் நிலை வீரர்களே அணிகளில் இடம் பெற்றுவிடுவர்; இது ஆசிய கிண்ணப் போட்டிகளிலுள்ள உத்வேகத்தை குறைத்துவிடும். ஆகவே, கூடியவரையில் முன்னணி வீரர்களை அணியில் இடம்பெறச் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கியூ' தோட்டம்



லண்டன் மாநகருக்கு அருகில் 'கியூ' (Kew) எனுமிடத்தில், முந்நூற்று இரண்டு ஏக்கர் நிலப்பரப்பில் உருவாக்கப்பட்டுள்ள 'கியூ' தோட்டம் பற்றி நீங்கள் அறிந்திருக்கிறீர்களா? உலகிலே எங்கும் காணப்படாத, உலகத்தின் வெவ்வேறு தட்ப வெப்ப நிலைகளில் வளரக்கூடிய தாவரங்கள் இங்கு ஒருங்கே வளர்க்கப்படுகின்றன.

நம் நாட்டில் காணப்படும் தென்னையும் றப்பரும் கூட செழித்து வளர்வதைக் காணலாம். அந்தந்த மரத்திற்கு ஏற்ற தட்ப வெப்ப நிலை உருவாக்கப்பட்டு இந்த மரங்கள் பாதுகாக்கப்படுகின்றன.

அரச குடும்பத்தினரின் தனிச்சொத்தாக இருந்த 'கியூ' தோட்டம், 1841 ஆம் ஆண்டு முதல் பொதுமக்களுக்காகத் திறந்து விடப்பட்டது.

இப்பொழுது பிரிட்டன் அரச நிர்வாகத்தின் கீழ் இது இயங்குகிறது. மிக நேர்த்தியாகவும் பயனுள்ளதாகவும் திட்டமிட்டு உருவாக்கப்பட்டுள்ளது இந்தக் 'கியூ' தோட்டம்.

## Atlas சித் ரூ-7

## அகில இலங்கை சித்திரம், உறுப்பெழுத்து மற்றும் கட்டுரை போட்டி - 2008

### முதல் சுற்றில் தெரிவு செய்யப்பட்டோரில் சிலர்...

**கீழ் காணப்படும் மாணவர்கள் மட்டும் இறுதி போட்டி பயிற்சிப் பட்டறைக்கென அழைக்கப்படுகின்றனர். ஏனைய பிரதேசங்களைச் சேர்ந்த இன்னும் சிலரின் பெயர்களும் அடுத்தடுத்த வாரங்களில் வெளியிடப்படும். குறித்த போட்டியாளர்களுக்கு தனித்தனியாக தபால் மூலமாகவும் அறிவிக்கப்படும். உங்களுக்கு அனுப்பப்படுகின்ற கடிதத்தையும் உங்களுடைய பிறப்புச் சான்றிதழின் பிரதியொன்றையும் கட்டாயம் கொண்டு வரவும்.**

**திகதி:- 14.06.2008 இடம்:- சுவர்ணபாலி பாலிகா வித்தியாலயம், அநுராதபுரம். நேரம்:- காலை 8 மணி**

| பெயர் | பாடசாலை | வகுப்பு |
|---|---|---|
| | **சித்திரம் - ஆரம்பப் பிரிவு** | |
| [illegible].சிவானிகா | ரெயின்போ பா.பாட., ரெயின்போ அவென்யூ, மன்னார். | ஆரம்பப் பிரிவு |
| | **பிரிவு 1-2** | |
| எம்.எம்.அப்துல்லாஹ் | பு/ஸயினப் பி.எல் பாட., புத்தளம். | 1 |
| எஸ்.சருஜா | மன்/புனித சேவியர் பெண்கள் தே.பாட., மன்னார். | 1 |
| ஜே.அபிஷான் | வ/இறம்பைக்குளம் மகளிர் ம.வித்., வவுனியா. | 2 |
| அசஜினன் | வ/இறம்பைக்குளம் மகளிர் ம.வித்., வவுனியா. | 2 |
| | **பிரிவு 3-4** | |
| வை.தனோசன் | இந்து கல்., திருகோணமலை. | 4 |
| வி.வக்ஷலன் | இந்து கல்., டொக்யார்ட் வீதி, திருகோணமலை. | 3 |
| ஜே.துஷ்யந்தன் | விவேகானந்தாக் கல்., திருகோணமலை. | 4 |
| ரி.ஜே.சுஜானா | புனித சேவியர் பெண்கள் தே.பாட., மன்னார். | 3 |
| எம்.பி.டீ.தருஷிகா | வ/மடுகந்த தே.பாட., மடுகந்த, வவுனியா. | 3 |
| ஏ.மரியா சுதர்சனா | புனித சேவியர் பெண்கள் தே.பாட., மன்னார். | 4 |
| | **பிரிவு 5-6** | |
| எம்.லபஸ்கர் | ஜே/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்., வல்வெட்டித்துறை. | 6 |
| வை.தனுஷியன் | மு/வித்தியானந்தாக் கல்., முள்ளியவளை. | 6 |
| பி.பிரணவன் | வ/புதுக்குளம் ம.வித்., சாஸ்திரகூலான்குளம். | 6 |
| எம்.எம்.சுல்ஃபத் | பு/ஃபாத்திமா பாலிகா ம.வித்., புத்தளம். | 6 |
| ஏ.வி.அஷ்விதன் | கோணேஸ்வரா இந்துக் கல்., திருகோணமலை. | 6 |
| | **பிரிவு 7-8** | |
| எம்.சாம்பவி | தி/சண்முகா இந்து மகளிர் கல்., திருகோணமலை. | 8 |
| அருட்சீலன் நிமலேசன் | புனித அந்தோனியார் கல்., யாழ்ப்பாணம். | 8 |
| முருகையா சஜீவன் | புனித அந்தோனியார் கல்., யாழ்ப்பாணம். | 8 |
| எ.அனுஷியா மொறாயஸ் | புனிதவலானார் ரோ.க.த.வித்., மன்னார். | 7 |
| | **பிரிவு 9-10** | |
| [illegible]நுஷான் | உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்., வல்வெட்டித்துறை. | 10 |
| [illegible].கஜேந்திரன் | கொக்குவில் இந்து கல்., கொக்குவில். | 10 |
| ஆர்.ரி.பிரணவன் | ஹார்ட்லி கல்., பருத்தித்துறை. | 10 |
| எஸ்.சந்திரகாந்த் | ஹார்ட்லி கல்., பருத்தித்துறை. | 10 |
| | **பிரிவு 11-12-13** | |
| எஸ்.சர்மிலா | யா/பண்டத்தரிப்பு மகளிர் உ/தர பாட., பண்டத்தரிப்பு. | 13 |
| க.கஜேந்திரன் | இணுவில் மத்திய கல்., சுன்னாகம். | 12 |
| டி.பபிராஜ் | இணுவில் மத்திய கல்., சுன்னாகம். | 11 |
| கனகராஜா அனுஷன் | இணுவில் மத்திய கல்., சுன்னாகம். | 13 |
| யோகேந்திரன் அரவிந்த் | இணுவில் மத்திய கல்., சுன்னாகம். | 12 |
| | **கட்டுரை - பிரிவு 12-13** | |
| எ.தனுஷ்கா | மெதடிஸ்ட் பெண்கள் உயர் பாட., பருத்தித்துறை. | 13 |
| ரொபர்ட் ரோஸ்மேரியல் | கல்மடு ம.வித்.,வவுனியா. | 12 |
| ப.யாழினி | செங்குந்த இந்துக் கல்., | 12 |
| பொ.லிங்கேஸ்வரி | கல்மடு ம.வித்.,வவுனியா. | 12 |
| ஏ.[illegible]க்சனவதனி | புனித சேவியர் கல்., மன்னார். | 12 |
| ஜே.ஜெயதர்ஷினி | சாவகச்சேரி இந்துக் கல்., யாழ்ப்பாணம். | 12 |
| பி.தயாத்சியா | புனித சிசிலியா பெண்கள் தேசிய கல்., யாழ்ப்பாணம். | 12 |
| எம்.ஃபாத்திமா ஸஹரானாஸ் | அன்-நஹரர் பெண்கள் ம.வித்., மூதூர். | 13 |
| என்.முஹம்மத் நுஸ்மில் | கிண்ணியா மத்திய கல்., கிண்ணியா. | 13 |
| குழந்தை ஜெபகுமார் | மெதடிஸ்ட் மத்திய கல்., மட்டக்களப்பு. | 13 |
| ஏ.பிரஜீத் | அநு/கெக்கிராவை மு.ம.வித்., கெக்கிராவை. | 12 |
| எஸ்.ஜலீலா | அநு/ஹொரவப்பொத்தானை ம.வித்., | 12 |
| வி.சுசந்தன் | பொல/மனம்பிட்டிய த.ம.வித்., | 12 |
| பி.குமுதினி | பொல/மனம்பிட்டிய த.ம.வித்., | 12 |
| பி.நிசாந்தினி | பொல/மனம்பிட்டிய த.ம.வித்., | 12 |
| | **பிரிவு 9-10-11** | |
| ஏ.ஆர்.ஃபாத்திமா சஜிதா | மட்/நகுமானியா ம.வித்., ஏறாவூர்-2 | 9 |
| வி.மொழிதா | மட்/துறைநீலாவணை ம.வித்., | 10 |
| ஆர்.ரக்ஷனா ஃபரீஜா | பொராத்துவெலி மு.ம.வித்., கந்தளாய். | 10 |
| ஜே.ஃபாத்திமா ரொஷானா | அன்-நஹார் பெண்கள் ம.வித்., மூதூர்-3 | 11 |
| எம்.கே.ரிஹானா பேகம் | பொராத்துவெலி மு.ம.வித்., கந்தளாய். | 10 |
| ஐ.எல்.ஃபஸீலா | ஸாஹிரா வித்., சம்மாந்துறை. | 9 |
| எம்.கிருஷ்ணகுமாரி | விவேகானந்தா பெண்கள் ம.வித்., கல்லடி, உப்போடை. | 10 |
| எச்.எம்.எஃப்.ரம்ஸானா | அல்-ரிஃபாய் ம.வித்., தம்பால, பொலன்னறுவை. | 9 |
| எம்.ஆர்.ஃபாத்திமா ஷிஃபானா | அல்-அக்ஷா தேசிய பாட., கல்பிட்டி. | 10 |
| ம[illegible]ழினி ரோஷிகா | காத்தான்குடி ம.வித்., கொத்தன் தீவு. | 9 |
| ஏ.எச்.ஃபாத்திமா ஹதீகா | பு/ஃபாத்திமா பாலிகா ம.வித்., புத்தளம். | 11 |
| ஜே.ஜெஸ்மினா | அல்-ரிஃபாய் ம.வித்., தம்பால, பொலன்னறுவை. | 9 |
| ஏ.எஃப்.தஸ்மிலா | ஸாஹிரா ம.வித்., அனுராதபுரம். | 11 |
| எஸ்.ஏ.எஃப்.அமீஷா | ஸாஹிரா ம.வித்., அனுராதபுரம். | 11 |
| எச்.எம்.எஃப்.ஹம்சனா | அல்-ரிஃபாய் ம.வித்., தம்பால, பொலன்னறுவை. | 11 |
| ஜி.மேரிபெல்பினா | புனித சேவியர் பெண்கள் கல்., மன்னார். | 11 |
| சித்தார்த்தனி | நயினா தீவு ஸ்ரீ கணேசா கனிஷ்ட ம.வி., யாழ்ப்பாணம். | 9 |
| எஸ்.கதீஸ்வரன் | கல்மடு ம.வித்., இரணியம்பைக்குளம். | 10 |
| எஸ்.ஆரணி | அக்கராயன் ம.வித்., கிளிநொச்சி. | 11 |
| ஸ்ரீகாந்த் சிவதர்ஷினி | கல்மடு ம.வித்., இரணியம்பைக்குளம். | 10 |
| டி.நந்தினி | யா/உடுவில் முருகமூர்த்தி வித்., | 11 |
| எஸ்.மதுஷா | யா/உடுவில் முருகமூர்த்தி வித்., | 10 |
| | **பிரிவு 6-7-8** | |
| சி.சிந்துஜா | வடிவாம்பிகா த.ம.வித்., சிலாபம். | 6 |
| ஜே.ஜெயகீதன் | யா/சாவகச்சேரி இந்துக் கல்., | 8 |
| எஸ்.தனசிகா | புதுக்குடியிருப்பு மத்திய கல்., முல்லைத்தீவு. | 7 |
| இ.ஜினி | புனித சேவியர் பெண்கள் கல்., மன்னார். | 7 |
| கே.லக்ஷிகன் | வேலணை மத்திய கல்., வேலணை. | 8 |
| எஸ்.ஆரணி | ஸ்ரீ சுப்ரமணிய வித்., முல்லைத்தீவு | 8 |
| எம்.வேணுப்பிரியா | வேலணை மத்திய கல்., வேலணை. | 8 |
| பி.தேனிஜா | புதுக்குளம் ம.வித்., வவுனியா. | 8 |
| ஆர்.சுபங்கன் | கதிரன் ம.வித்., மட்டக்களப்பு | 8 |
| எம்.சாம்பவி | திரு/ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்., | 8 |
| ஏ.ஏ.ரிதா | அந்-நஸார் வித்., காத்தான்குடி. | 7 |
| சி.எஸ்.ஹர்ஷன் | இந்து கல்., மட்டக்களப்பு. | 8 |
| நர்த்தனா சுமந்திரன் | வின்சென்ட் பெண்கள் உ/தர பாட., மட்டக்களப்பு. | 7 |
| என்.ஜனுஸ்கா | களுதாவளை வித்., களுவாஞ்சிக்குடி. | 8 |
| ஏ.எம்.இஹ்திசாம் | கிண்ணியா மத்திய கல்., கிண்ணியா. | 7 |
| எம்.என்.எஃப்.சஹானா | ஸாஹிரா ம.வித்., அனுராதபுரம். | 8 |
| ஏ.எஸ்.சதீலா ஃபர்வின் | திகவெவ ம.வித்., ஹொரவப்பொத்தானை, அனுராதபுரம். | 6 |
| எம்.ஜே.எம்.நஸ்ரின் | தருக்கரகம ம.வித்., கஹடகஸ்திகிலிய. | 7 |
| என்.எம்.முஹம்மட் சியாத் | கெக்கிராவை மு.ம.வித்., அனுராதபுரம். | 7 |
| கே.ஆர்.எஃப்.சம்ரத் | ஜாயா ம.ம.வித்., கதன்டுகம, அனுராதபுரம். | 8 |
| | **உறுப்பெழுத்து - பிரிவு 4-5** | |
| எம்.எஸ்.ஸஹியாபானு | மில்லத் மகளிர் ம.வித்., மட்டக்களப்பு | 5 |
| எம்.எஸ்.ஃபாத்திமா சரீஹா | மில்லத் மகளிர் ம.வித்., மட்டக்களப்பு | 4 |
| எம்.என்.ஃபாத்திமா நஃப்ரின் | மில்லத் மகளிர் ம.வித்., மட்டக்களப்பு | 4 |
| எம்.எஸ்.எஃப்.ஷாமிலா | 4மில்லத் மகளிர் ம.வித்., மட்டக்களப்பு | 5 |
| இஸட்.ஷஹாமா | ஸாஹிரா கல்., பள்ளிவாசல் வீதி, திருகோணமலை. | 4 |
| பி.துவாரகா | கோம்பாவில் விக்னேஸ்வரா வித்., புதுக்குடியிருப்பு. | 4 |
| தி.திவ்யா | புதுக்குளம் ம.வித்., சாஸ்திரக்கூலான்குளம். | 5 |
| எம்.மதுசனன் | வ/தமிழ் மத்திய ம.வித்., வவுனியா. | 5 |
| பி.சர்மிளா | மூளாய் சைவப்பிரகாச வித்., சுழிபுரம். | 5 |
| எஸ்.பியூலா | மீசாலை வீரசிங்கம் ம.ம.வித்., | 4 |
| ஜே.ஜெயபபா | மீசாலை வீரசிங்கம் ம.ம.வித்., | 5 |
| கே.சிவகலை | மீசாலை வீரசிங்கம் ம.ம.வித்., | 5 |
| எம்.டீ.தினூஷாபானு | கெக்கிராவை மு.ம.வித்., | 4 |
| டபிள்யூ.டி.பி.தில்ஷான் | புனித ஜோசப் வித்., அனுராதபுரம். | 4 |
| | **பிரிவு 1-2-3** | |
| கே.மோகனபதன் | ஸ்ரீ கோணேஸ்வரா இந்து கல்., திருகோணமலை | 3 |
| எம்.எஃப்.ஃபதின் மஸா | அந்-நஸார் வித்., காத்தான்குடி, மட்டக்களப்பு. | 3 |
| கே.விதுரா | ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்., திருகோணமலை | 2 |
| டி.பிரபோதினி | ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்.,திருகோணமலை. | 2 |
| எஸ்.எச்.விஸேஹா | விவேகானந்தா பாலிகா ம.வித்.,மட்டக்களப்பு. | 3 |
| டி.பவதக்ஷனா | ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்.,திருகோணமலை | 2 |
| எஸ்.அருள்ராஜ் | மீசாலை வீரசிங்கம் ம.வித்., யாழ்ப்பாணம். | 3 |
| எஸ்.அட்சயா | வ/இறம்பைக்குளம் பெண்கள் ம.வித்., வவுனியா. | 3 |
| டி.ஜெயராஜா | வ/பெரியகுமரேசன் ம.வித்., | 3 |
| ஏ.கோபிகன் | யா/மீசாலை வீரசிங்கம் ம.வித்., | 2 |
| எஸ்.சனோமி | கோம்பவில் விக்னேஸ்வரா வித்., | 3 |
| டி.யசோதா | யா/மூளாய் சிவப்பிரகாச வித்., | 3 |
| பிரபாகரன் அஞ்சலிகா | இறம்பைக்குளம் பெண்கள் ம.வித்., வவுனியா. | 1 |
| எஸ்.சஸ்விதா | இறம்பைக்குளம் பெண்கள் ம.வித்., வவுனியா. | 2 |
| எம்.எஃப்.நஹதியா மரியம் | ஸாஹிரா ம.வித்., அனுராதபுரம். | 2 |
| ஏ.பி.ஃபாத்திமா ஸஃப்னா | ஹொரவப்பொத்தானை மு.ம.வித்., | 2 |
| எம்.முஹம்மட் ஷம்றி | ஹொரவப்பொத்தானை மு.ம.வித்., | 2 |
| எம்.ஏ.ஃபாத்திமா ஹஸ்னா | அனு/கணேவல்பொல மு.ம.வித்., | 3 |
| எம்.ஃபாத்திமா குஸ்தா | ஸாஹிரா ம.வித்., அனுராதபுரம். | 2 |

**அநுராதபுரம், கண்டி, கொழும்பு பகுதிகளில் நடைபெறும் இறுதிப்போட்டி பயிற்சிப் பட்டறைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளோரின் பெயர்கள் முறையே அடுத்தடுத்த வாரங்களில் வெளியிடப்படும்.**

மேலதிக விபரங்களுக்கு:-
*லங்கா பென்சில் நிறுவனம்*
*011-2912874, 011-2912873*

போட்டி ஏற்பாடு: Atlas

ஊடக அனுசரணை: விஜய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 156 - பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

| போட்டி: 01 | போட்டி: 02 | போட்டி: 03 | போட்டி: 04 | போட்டி: 05 (குறு.போ-167) |
|---|---|---|---|---|
| ஜே.எம்.ஸர்ஹான், தரம் - 6A, மாறை/அஸ் ஸபா ம.க.வித்., தெனிபிட்டிய. | ஜே.மேனகா, தரம் - 10, கிங்ஸ்டன் ச.கல்., வெள்ளவத்தை. | என்.எம்.ஸஜாத், தரம் - 7, பது/அல்-இர்ஷாத் ம.வித்.,ஹாலி-எல. | எம்.எம்.அப்றார், தரம் - 9A, அம்/அந்நூர் வித்., அட்டாளைச்சேனை-08. | சி.அஜந்தன், தரம் - 7F, வ/தமிழ் மத்திய ம.வித்., வவுனியா. |

## 2

(A) ஒரே அளவுடைய 5 போத்தல்களுள்ளன. அவை முறையே 1, 2, 3, 4, 5 எனப் பெயரிடப்பட்டுள்ளன. 1, 2 ஆம் போத்தல்கள் A பிரிவு என்றும் 3, 4, 5 ஆம் போத்தல்கள் B பிரிவு என்றும் பெயரிடப்பட்டுள் ளன. 1,2 ஆம் போத்தல்களில் அரைவாசிக்கு நீர் நிரப்பப்பட்டுள்ளது. 3 ஆம் போத்தலில் 1/4 பங்கிற் கும் 4 ஆம் போத்தலில்1/2 பங்கிற்கும் 5 ஆம் போத் தலில் 1/4 பங்கிலும் குறைந்தளவு நீரும் நிரப்பப்பட் டுள்ளது.

1) கூடியளவு நீரைக் கொண்ட பிரிவு எது?..................................
2) B பிரிவில் குறைந்தளவு நீர் நிரப்பப்பட்டுள்ள போத்தல் எது? ..............................
3) B பிரிவில் கூடியளவு நீர் நிரப்பப்பட்டுள்ள போத்தல் எது? ..................................

(B) இணைக்க


| (அ) | (ஆ) | (இ) |
|---|---|---|
| 1) 324 | LVII | Twenty eight |
| 2) 1040 | XXVIII | Three hundred and twenty four |
| 3) 28 | CCCXXIV | Fifty seven |
| 4) 769 | MXL | Seven hundred and sixty nine |
| 5) 57 | DCCLXIX | Thousand forty |

## வித்தியாசங்களில் √ அடையாளமிடுக 1



## 3

### உங்களுக்குத் தெரியுமா?



1. எமது நாட்டின் மிக உயரமான நீர்வீழ்ச்சி இதுவாகும். இதன் உயரம் 790 அடி என கணக்கிடப்பட்டுள் ளது. இந்நீர்வீழ்ச்சியின் பெயர் என்ன?

..................................

*(சமனலகந்த/ பம்பரகந்த/ பிதுறுதலாகல)*



2. 1965 ஆம் ஆண்டுபிறந்த இவர், உலகின் பணக்காரப் பெண்களின் வரிசையில் தனக்கென ஓர் இடத்தை பெற் றுள்ளார். இவர் 'ஹெரிபொட் டர்' எனும் தொடர் நாவலை எழுதி அதன் பிரதிகள் உலகம் பூராகவும் விற்பனையில் சாதனை புரிந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இவரின் பெயர் என்ன?

*(ஹெலன் கெலர்/பியூட்ரிக்ஸ் பொட்டர்/ ஜே.கே.ரோவ்லிங்)*





**தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்**

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2008.06.11 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 159**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**

## அறிவுக்கு விருந்து - 156 விடைகள்

**போட்டி: 02**

(A) கீழே, கரும்பு, செவ்விந்தியர்களே, வந்தனர், அவருள், உற்சாக வெறி, சாய்த்தனர், வளத்தை, உறிஞ்ச, புரட்சியின், தீப்பொறிகள்.

(B) 1) benifit 2) fire brigade 3) shelter 4) author 5) patience



**போட்டி: 03**

✱ விக்டோரியா

**போட்டி: 04**

(A) ✱ 128-8 2-32 ✱ 20-4 16-32 ✱ 112-86 82-104


(B) ✱ ஆம்

## சரியான விடையை எழுதுக 4

(பிடி/பந்தி/போர்/முக்காரமிடும்/மூசு)

அ) மீன் வளர்க்கும் இடம் தொட்டி என்பது போல, யானை கட்டும் இடம் ............................ ஆகும்.
ஆ) பனையின் இளங்காய் நுங்கு என்பது போல, பலாவின் இளங்காய் ........................எனப்படும்.
இ) யானையின் ஆண் களிறு என்பது போல, அதன் பெண் ................................ ஆகும்.
ஈ) பூனை சீறும் என்பது போல, எருது ..................................
உ) கீரைக் கட்டு என்பது போல, வைக்கோல் ............................... எனப்படும்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல.170 5



### மேலிருந்து கீழ்

01. தூக்குத் தண்டனையை நிறைவேற்றுவதற்காக இருக்கும் ஊழியர் இவ்வாறு அழைக்கப்படுகின்றார்.
02. அதிசயம்-ஒத்தகருத்துச் சொல்.
03. அடகு என்றும் அர்த்தப்படும்.
04. சூரியன் மறையும் திசை.
06. ஒட்டை என்றும் கூறலாம்.
08. ஆலமரக் கிளைகளிலிருந்து கீழ் நோக்கித் தொங்குவது.
09. பூட்டானின் தலைநகரம்.
10. பெரிய நீர்நிலை.

### இடமிருந்து வலம்

01. சந்திரன்-ஒத்தகருத்துச் சொல்.
04. பள்ளம்-எதிர்க்கருத்துச் சொல்.
05. உலகில் அதிகளவில் பயிரிடப்படும் தானிய வகை.
07. பலா, தோடை என்பனவற்றில் பிரித்தெடுக்கக்கூடிய சதைப்பகுதி இவ்வாறு அழைக்கப்படும்.
08. பகுபதங்களின் இறுதியில் நிற்கும் உறுப்பு.
10. ஸ்வரங்களின் எண்ணிக்கை.
11. சிறியது-எதிர்க்கருத்துச் சொல்.

(குழம்பி)

### குறுக்கெழுத்துப் போட்டி 167 விடைகள்

**மேலிருந்து கீழ்**

01. நயகரா
02. நிமிடம்
03. சிரசு
04. ஆசியா
07. ஈரி
08. மனு
09. சாணி

**இடமிருந்து வலம்**

01. நடுநிசி
05. மிரட்சி
06. கண்டம்
09. சாரியை
10. ஊனுண்ணி

**குறுக்கெழுத்துப் போட்டி -170**
**"விஜய்" த.பெ.எண். 2037**
**கொழும்பு**

### பாராட்டுப் பெறுவோர்

ஃப்.ஷாஹினா, தரம் - 12, நு/காஹிரா மு.வித்., அஹஸ்வெவ.

கே.முஸோபர், தரம் - 7F, ஸாஹிரா தே.பாட., புத்தளம்.

பு.தனுஷா, தரம் - 8, நோர்வூட் தமிழ் ம.வித்., நோர்வூட்.

### அன்பு மாணவர்களே!

இது உங்கள் கவனத்திற்கு.....

இனிவரும் போட்டிகளுக்கான விடைகளை நீங்கள் தபாலட்டையில் ஒட்டி எமக்கு அனுப்பி வையுங்கள். விடைகளை அனுப்பும் போது தவறாமல் உங்கள் பெயர், முகவரி, கல்வி கற்கும் தரம், பாடசாலையின் பெயர், அதன் முகவரி, வசிக்கும் நகரம், மாவட்டம் என்பனவற்றையும் எழுதி அனுப்புங்கள். அவை போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை காலதாமதமின்றி சேர்ப்பதற்கு பெரும் துணையாக அமையும். அத்துடன், நீங்கள் உங்களுக்கு விரும்பிய எந்தவொரு போட்டியிலும் கலந்து கொள்ளலாம் என்பதையும் கருத்தில் கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தளபதியின் திட்டம்

வரலாற்றிலிருந்து..

எழுதுபவர்: திலகன்
சித்திரம் : அபயன்



**1.** கொன்ஸ்டென்டைன் டி சா வின் விவேகம் நிறைந்த செயற்பாட்டினால் சில சாதனைகள் நிகழ்ந்தன. போர்ப்படைகள் புனர் நிர்மாணிக்கப்பட்டன. இதனால், அவற்றின் வினைத்திறன்கள் மிகுந்தன. அவை புத்தி சாதுர்யம் மிக்க அதிகாரிகளின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன. நாட்டு மக்களின் மனதை வெல்லவே தளபதி முயற்சித்தார்.

**2.** அதிகாரிகளின் தவறான செயல்களை அடக்கினார். மன்னன் செனரத்துடன் இருந்த கொடுமைக் காரர்கள் தாம் இவ்வாறு அடக்கப்படுவதற்காக யுத்தம் செய்ய ஆயத்தமாகினர். இவ்வேளை, கலகக்காரர்கள் செனரத் மன்னனுக்கு எதிராக செயல்பட்டனர். முழுக் கிழக்கு கரையோரத்தின் அதிகாரத்தையும் அவர்கள் கைப்பற்றினர். புதிய படை அணிகளை உருவாக்கினர்.

**3.** அதன்பின் மாயாதுன்னையை இலங்கையின் சக்கர வர்த்தியாக்க கலகக்காரர்கள் தீர்மானம் எடுத்தனர். படை அணியுடன் தெனவக்க எனும் ஊருக்கு வந்தனர். தளப தியோ அவசரப்பட்டார். சப்ரகமுவ கோட்டை யைப் பலப்படுத்தினார். அங்கு மேலதிக படை அணிகளை நிறுத்தினார். இவர்கள் கலகக்காரர்களை தாக்கினர்.



**4.** இதனால், கலகக்காரர்கள் பலவீனமடைந்த னர். தென வக்க ஊரைக் கைவிட்டனர். பின்வாங்கினர். கொன்ஸ்டென்டைன் டி சா அவர்களைத் தாக்கி னார். கலகக்காரர்கள் திருப்பித் தாக்க ஆரம்பித்தனர். இதனால், போர்த்துக்கேயப் படையினர் பல சிரமங்களை எதிர்நோக்கினர். காயமடைந்தனர். இதனால், தளபதி போரைக் கைவிட்டார். காய மடைந்தவர்களுடன் பின்வாங்கினார்.

**5.** தளபதி சப்ரகமுவ கோட்டையை நோக்கி வந்தார். வழியில் கலகக்காரர்கள் மீண்டும் தொல்லை கொடுத்த னர். இதனால், தளபதி தந்திரோபாயமொன்றைக் கையாண்டார். தனது சேனையை பின்வாங்கும்படி கட் டளையிட்டார். அதனை போலியாக ஏமாற்றுவ தற்கே செய்தார். அவர் நினைத்தது போல் கலகக் காரர்கள் ஏமாந்தனர். மகிழ்ச்சி அடைந்தனர். தளபதி யாரோ இதனைப் பயன்படுத்தி திடீரென அவர்களை தாக்கினார். யாரும் எதிர்பாராத வேளை நடந்த தாக்குதல்களி னால் கலகக்காரர்கள் சிதறி னர்.

**6.** எனினும், தாக்குதலுக்கு எதிர்தாக்குதல் நடத்தினர். ஆனாலும், அது பலன் அளிக்கவில்லை. அவர்களின் படை அணி போர்த்துக்கேயருக்கு முகம் கொடுப்பதில் தோல்வி அடைந்தது. பலவீனமடைந்தனர். போர்த்துக்கேயப் படையினரோ கலகக்காரர்களுக்கு பெரும் நட்டத்தை ஏற்படுத்தினர். அவர்கள் முழுக் கிராமங்களையும் தீ வைத்துக் கொளுத்தினர். மிருகங்கள் பறவைகளைக் கூட கொன்று குவித்தனர்.

**7.** அன்று அவர்கள் குழந்தைகள் சிறுவர்கள் பெண்களைக் கூட வெட்டிக் கொன்றனர். ஒழிந்திருந்த காங்க ஆராய்ச்சியை போர்த்துக்கேயர் கைது செய்தனர். பெரெட்டோ மற்றும் மாயாதுன்னையின் எதிர்பார்ப்புக்களை தவிடு பொடியாக்கினர். உயிரைப் பாதுகாத்துக் கொண்டனர். எனினும், பின்னர் பெரெட்டோ எதிரிகளிடம் பிடிபட்டான். அவர்கள் இந்த கிளர்ச்சி வீரனை பகிரங்கமாகக் கொன்றனர்.



**8.** இந்த யுத்தத்தால் பிரதம தளபதியாருக்கு மாபெரும் வெற்றி கிடைத்தது என்பது மாத்திரம் நிச்சயமா கும்.

## பட்டினிக் கொடுமையில் பாலகர்கள்



பட்டினிக் கொடுமையால் சுமார் 60 லட்சம் பிள்ளை கள் மரணத்தை எதிர்நோக் கும் அபாயம் ஏற்பட்டுள் ளது. ஆபிரிக்க நாடான எத்தியோப்பியாவில்தான் இந்தக் கொடிய நிலை நிலவு கின்றது.

மழை இல்லாததால் இந் நாட்டுக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அதாவது பயிர்கள் வளரமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் மக் களுக்கு உண்பதற்கு எது வும் கிடைப்பதில்லை. இரண்டு பிராந்தியங்களில் 60 ஆயிரத்துக்கும் மேற் பட்ட பிள்ளைகள் உடனடி யாக உணவும், பராமரிப்பும் வழங்கினால் மட்டுமே உயிர் பிழைப்பார்கள் என் னும் நிலைமை அங்கு ஏற் பட்டுள்ளது.



உதவிகளை வழங்குபவர் கள் சீனாவையும், பர்மாவை யும் மட்டுமே கவனத்தில் கொண்டுள்ளதால் தாம் நிதிப்பற்றாக்குறையை எதிர் நோக்குவதாக நிவாரணப் பணியாளர்கள் தெரிவிக்கின் றனர். பயிர்கள் வளராத நிலைமை தொடர்ந்து இருந்து வருவதால் அடுத்த சில மாதங்களில் எத்தியோப் பியாவின் நிலைமை மேலும் மோசமாகப் பாதிப்படையும் அபாயம் உள்ளது.

பட்டினி வரலாற்றைக் கொண்ட எத்தியோப்பிய நாட்டில் 1984 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பஞ்சம் காரணமாக அங்கு பத்து லட்சத்துக்கும் அதிகமான மக்கள் இறந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானத்தில் பறந்த மர்மப் பெண்



சில மாதங்களுக்கு முன் செவ்வாய் கிரகத்தில் மனித உருவம் இருப்பது போன்ற படம் வெளியாகி பெரும் விவாதத்தை உருவாக்கியிருந்தது. இதேபோல இப்போது பறக்கும் பெண் போன்ற ஒரு மர்ம உருவம் மெக்சிகோ நாட்டின் 'நியூவோ லியோன்' மலைப்பகுதியில் நடமாடுவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

அந்தப் பறக்கும் பெண் உருவம் 'நியூவோ லியோன்' மலைப் பகுதியில் நடமாடியது உறுதி செய்யப்பட்டுள்ளது. மெக்சிகோ நாட்டின் பிரபல விண்ணியல் ஆய்வாளர் லூசியா சிட் என்பவர் தலைமையிலான குழுவினர் இதை உறுதி செய்துள்ளனர். மேலும், இதற்கான வீடியோ பட ஆதாரங்களும் வெளியிடப்பட்டுள்ளன.

இது குறித்து கருத்துத் தெரிவித்துள்ள ஆய்வாளர், "லூசியா மலைப்பகுதியில் பறக்கும் உருவம் நடமாடுவது உண்மைதான், எங்களின் தொடர்ச்சியான ஆய்வு இதை உறுதிப்படுத்துகிறது. பறக்கும் அந்த உருவத்தைப் படம் பிடித்திருக்கிறோம்" என கூறியுள்ளார்.

இவர் மட்டுமன்றி ஜெரார்டோ கர்ஷா, லியானார்டோ சமானியகோ குடலூப் என்னும்இரண்டு பொலிஸ் அதிகாரிகளும் அந்தப் பறக்கும் பெண் உருவத்தை நேரில் பார்த்துள்ளனர்.

மர்ம உருவம் பற்றி கர்ஷா வர்ணிக்கும்போது,

"சூனியக்காரி மாதிரியான தோற்றத்தில் அது இருந்தது. அந்த உருவம் துடைப்பம் குச்சியில் பறந்து சென்ற மாதிரி இருந்தது எனத் தெரிவித்துள்ளார்.

மற்றையவரான குடலூப் தெரிவிக்கையில், "எனது ரோந்து வாகனத்தில் சென்றபோது மரத்திலிருந்து அந்த உருவம் வண்டியின் முன்பக்கமாக விழுந்தது. வாகனத்தின் முன்பக்கக் கண்ணாடி மீது கையையும் வைத்தது. அதன் பிறகு எனக்கு என்ன நடந்தது என்பதே தெரியவில்லை" என்றார்.

பொலிஸ் அதிகாரிகளும், விண்ணியல் ஆய்வாளர்களும் ஒரே நேரத்தில் இப்படிச் சொல்வதால் இந்த விடயம் பெரிதும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளதாக கூறப்படுகின்றது. ஆய்வாளர்கள் இது குறித்தான மேலதிக ஆய்வுகளில் ஈடுபட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2008, ஜூன் மாதம் 04 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday June 04, 2008.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org